உ

சிவமயம்

வேலாயுத(ன்) பிள்ளைக்கு

# சைவத்தமிழால் ஒரு நினைவேடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும்
தாவடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திரு. தம்பையா வேலாயுதபிள்ளை

அவர்களின்


சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

05.01.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



எம் வாழ்வின் ஒளி விளக்காய்
எம் முன்னேற்றத்தின் வழி காட்டியாய்
அன்பின் உறைவிடமாய்
இல்வாழ்வின் ஈசனாய்
எமக்கெல்லாம் உறுதுணையாய்
வாழ்ந்து எம்மை வாழ்வாங்கு
வாழ வைத்த ஐயா
அன்புத் தெய்வம் அமரர் தம்பையா
அவர்களின் ஆத்மாவிற்கு
அஞ்சலியாய் காணிக்கைக்காய்
சமர்ப்பிக்கின்றோம். இந்நூலை

ஓம் சாந்தி, ஓம்சாந்தி, ஓம்சாந்தி



இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"



மலர்வு
24-01-1942

உதிர்வு
06.12.2021

அமரர்

# திரு. தம்பையா வேலாயுதபிள்ளை

அவர்களின்

## திதி வெண்பா

ஆண்டு பிலபவ கார்த்திகைத் திங்களுடன்
பூண்ட பூராடம் வளர்திருதிகையில் - ஈண்டு
வேலாயுதபிள்ளை பூவுலகம் வீட்டு
மேலாம் விண்ணுலகுமடைந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில காலத்தால் அழியாத நினைவுகள்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்





# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஒற்றை மருப்பும் ஓரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும் பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத்
தன்மனதில் எப்பொழுதுங்
கொண்டக்கால் வாராது கூற்று.

## தேவாரம்

**திருஞானசம்பந்தர் தேவாரம் - இரண்டாம் திருமுறை**

**பண் - சீகாமரம்** **திருத்தலம் - புள்ளிருக்குவேளூர்**

கீதத்தை மிகப்பாடும்
அடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற
பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால்
வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான்
புள்ளிருக்கு வேளூரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாவுக்கரசர் தேவாரம் - நான்காம் திருமுறை

பண் - காந்தாரம் | திருத்தலம் - திருவையாறு

மாதர்ப் பிறைக்கண்ணி யானை
மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல்
ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங்
களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங்
கண்டறி யாதன கண்டேன்.

## சுந்தரமூர்த்திசுவாமிகள் தேவாரம் - ஏழாம் திருமுறை

பண் - நட்டராகம் | திருத்தலம் - திருக்கோளிலி

நீள நினைந்தடி யேனுமை
நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மட வாளவள்
வாடி வருந்தாமே
கோளிலி எம்பெரு மான்குண்டை
யூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை எம்பெரு மானவை
அட்டித் தரப்பணியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

**மாணிக்கவாசகர்சுவாமிகள் - எட்டாம் திருமுறை**

**திருத்தலம் - திருவண்ணாமலை**

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதேயெந் தோழி பரிசேலோர் எம்பாவாய்.

# திருவிசைப்பா

**ஒன்பதாம் திருமுறை**

**பண் - பஞ்சமம்** **திருத்தலம் - தில்லைச்சிதம்பரம்**

நீறணி பவளக் குன்றமே ! நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே !
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா !
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே !
ஏறணி கொடியெம் ஈசனே, உன்னைத்
தொண்டனேன் இசையுமாறு இசையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

ஒன்பதாம் திருமுறை

பண் - பஞ்சமம் திருத்தலம் - தில்லைச்சிதம்பரம்

மன்னுக தில்லை வளர்கநம்
பத்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

# திருமந்திரம்

திருமூலர் - பத்தாம் திருமுறை

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவந்தாதி

**பட்டினத்தடிகள் திருவேகம்பமுடையார்- பதினோராம் திருமுறை**

**திருத்தலம் - திருக்கச்சியேகம்பம்**

பாதம் பரவியொர் பித்துப்
பிதற்றினும் பல்பணியும்
ஏதம் புகுதா வகையருள்
ஏகம்பர் ஏத்தெனவே
போதம் பொருளால் பொலியாத
புன்சொல் பனுவல்களும்
வேதம் பொலியும் பொருளாம்
எனக்கொள்வர் மெய்த்தொண்டரே

# திருப்புராணம்

**பன்னிரண்டாம் திருமுறை**

ஆதியாய் நடுவுமாகி அள்வு
இலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித்
தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய்
ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொது
நடம் போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

அருணகிரிநாதர்

இருந்த வீடுங் கொஞ்சிய சிறுவரு முறுகேளும்
இசைந்த வூரும் பெண்டிரு மிளமையும் வளமேவும்
விரிந்த நாடுங் குன்றமு நிலையென மகிழாதே
விளங்கு தீபங் கொண்டுனை வழிபட அருள்வாயே
குருந்தி லேறுங் கொண்டலின் வடிவினன் மருகோனே
குரங்கு லாவுங் குன்றுறை குறமகள் மணவாளா
திருந்த வேதந் தண்டமிழ் தெரிதரு புலவோனே
சிவந்த காலுந் தண்டையு மழகிய பெருமாளே.

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் தம்பையா வேலாயுதபிள்ளை அவர்களின் வாழ்க்கைப்பதிவுகள்

செந்தமிழும் செழுங்கலையும் ஓங்குபதி திருவூராம் இணுவை தெற்கில் வாழ்ந்த சைவவேளாண்குடியில் தம்பையா சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் இளைய புதல்வனாக 24-01-1942 ஆம் ஆண்டு தோற்றம் பெற்றவரே வேலாயுதபிள்ளை அவர்கள்.

இவருக்கு திருமதி அமரர் குங்கிலியம் விநாயகமூர்த்தி அவர்களும், திருமதி இராசாத்தி சிவசுப்பிரமணியம் அவர்களும் மூத்த சகோதரி களாவர். இவர் இளமைக்கல்வியை இணுவில் அம்பிகைபாகர் வித்தியாசாலையிலும் (தற்போது இணுவில் இந்துக்கல்லூரி) உயர்கல்வியை உரும்பராய் இந்துக்கல்லூரியில், மற்றும் கொக்குவில் இந்துக்கல்லூரியிலும் கற்றுத்தேர்ந்தார்.

இளமைக் காலத்தில் தனது தந்தையை இழந்தார். தாயின் அன்பு அரவணைப்பில் கல்விகற்று உயர்ந்தார். தாயிடத்து மிக்கபாசம் உடையவர். இவரது கல்வித்தகமைக்கு ஏற்ப ஆங்கில ஆசிரியராக 31 வருடங்கள் பணியாற்றி எத்தனையோ நன்மாணாக்கரை உருவாக்கி உள்ளார்.

1971 இல் ஆசிரியராக முதல் நியமனம் பெற்று 2002 வரை ஆங்கில ஆசிரியராக கண்டி தெகியோவத்த, கண்டி கரக்கொட பாடசாலைகளில் கடமையாற்றி 1972-73 வரை ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி ஆசிரியராகக் கற்று, கண்டி ஹெங்கல, கண்டி குண்டசாலை, யா/பார்வதி வித்தியாசாலை, யா/சென்மேரி பாடசாலைகளில் ஆசிரியராகவும், யா/சுதுமலை தமிழ்க்கலவன் பாடசாலையில் உப அதிபராகவும், அதிபராகவும் கடமை யாற்றியுள்ளார்.

அமரர் வேலாயுதபிள்ளை வேலை வாய்ப்புப்பெற்று உரியகாலத்தில் தாவடி வடக்கைச்சேர்ந்த கந்தையா ஆசிரியர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் இரத்தினம் தம்பதியினரின் மூத்தபுதல்வி இந்துமதியை 1977 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். இருகுடும்பத் தவர்களும் சைவகலாசாரமுடையவர்கள். இறைபக்தி மிக்கவர்கள்.

இல்லறம் நல்லறமாகியது. பர்த்தாவுக்கேற்ற பதிவிரதை யாக இந்துமதி வாழ்ந்தார். இவர்களது மனையறம் சிறந்தது. நன்மக்கட்பேறு அடைந்தனர். இவர்களுக்கு மேகலா, நிரஞ்சலா என்ற இரு பெண்பிள்ளைகளும், சனாதனன் என்ற ஆண்மகனும் பிள்ளைகளாவர்.

வேலாயுதபிள்ளை பிள்ளைகளை நன்கு கற்பித்து கல்வியாளர்களாக ஆக்கினார். மூத்தமகள் மேகலா ஆங்கில பயிற்சி ஆசிரியராக சுதுமலை சின்மயபாரதி பாடசாலையில் கல்வி கற்பிக்கின்றார். இரண்டாவது மகள் நிரஞ்சலா பட்டதாரிப்படிப்பை முடித்து, வடக்கு மாகாணத்தில் திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றுகின்றார். மகன் சனாதனன் பொறியியலாளராகவும், இலங்கை தகவற்தொழிநுட்பக் கல்லூரியில் விரிவுரையாளராகவும் கடமை யாற்றுகின்றார்.

உரியகாலங்களில் தனது பிள்ளைகளுக்கு நல்லகல்வியூட்டி கல்வி கற்பித்த பெருமையுடையவர் வேலாயுதபிள்ளை அவர்கள்.

“தம்மிற் தம்மக்கள் அறிவுடைமை - மன்னுயிர்க்
கெல்லாம் இனிது”

என்ற வாக்கிற்கிணங்க தன்பிள்ளைகளை நன்கு கற்பித்துள்ளார். அதுமட்டுமல்ல தனது பிள்ளைகட்கும் பொருத்தமான திருமணங்களை செய்து வைத்துள்ளார். இந்தவகையில் மூத்தமகள் மேகலாவிற்கு கட்டுடையைச் சேர்ந்த முருகையா - சீதாதேவி தம்பதியினரின் புதல்வர் சுதாகரனையும், இரண்டாவது மகள் நிரஞ்சலாவை மூளாயைச் சேர்ந்த சந்திரன் பராசக்தி தம்பதியினரின் புதல்வர் கிருஷ்ணேந்திரனையும் திருமணம் செய்து வைத்தார். இதன்பேறாக, மூத்தமகள் மேகலா மாதுமை, மாதனன் என்ற இருகுழந்தைகளையும், நிரஞ்சலா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உமைபாலன் என்ற ஆண்குழந்தையையும் பெற்றனர். எனவே வேலாயுதபிள்ளை தம்பதிகள், மாதுமை, மாதனன், உமைபாலன் என்ற பேரப்பிள்ளைகளைப் பெற்று மகிழ்ந்தனர்.

இல்லறச் சிறப்புடன் மகிழ்ந்து வாழ்ந்த வேலாயுதபிள்ளை பொதுச்சேவைக்காகவும் தன்னை ஈடுபடுத்தி வாழ்ந்தவர். ஏழைப் பிள்ளைகட்கு இலவசமாக ஆங்கிலத்தைக் கற்றுக்கொடுத்தார். ஆலயத்திருத்தொண்டுகளில் ஈடுபட்டு தன்னாலான தொண்டு களைச் செய்துவந்தார். இணுவில் பரராசசேகரப்பிள்ளையார், ஞானலிங்கேசுவரர் ஆலயங்களில் இயன்றபணி புரிந்தார். புராணபடனம், திருவாசகமுற்றோதல், தேவாரம் பாடல் முதலிய தொண்டுகளைச் செய்தவர். காலை, மாலை ஆகிய நேரங்களில் ஆலயங்களுக்கு சென்று வழிபாடாற்றுவதை வழக்கமாகக் கொண்டவர். வயலின் வாசிப்பதிலும் ஆர்வம் உள்ளவர். ஆத்மீகச் சிந்தனையை வளர்த்துக் கொள்ள திருமந்திர வகுப்பு, சைவசித்தாந்த வகுப்புக்களில் கலந்து கொண்டவர். எமது உறவில் நடக்கும் நல்லது கெட்டது வைபவங்களை தானே முன்னின்று நடாத்தி வைக்கும் பண்புடையவர். தற்போது உள்ள சமூகத்திற்குத் தெரியாத விடயங்களை தெரிந்து இது இப்படித்தான் செய்வதுமுறை என்று கற்றுக்கொடுப்பவர். அவருடைய நல்ல குணாதிசயங்களை அவருடன் நன்கு பழகியவர்கள் அறிவர். எல்லோருக்கும் உதவவேண்டுமென்ற மனப்பக்குவம் உடையவர். ஏழைகட்கு உதவுபவர். காரைக்கால் கோயிலுக்கு அருகாமையில் கவனிப் பாரற்ற ஆதரவற்ற நாய்களுக்கு சாப்பாடு கொண்டு செல்வார். அருந்துவதற்கு நீரும் எடுத்துவைப்பார். ஞான லிங்கேசுவரர் சிவன் கோயிலில் வளர்க்கப்படும் மான், பசு, மயில் இவற்றுக்கெல்லாம் இரக்கம் கொண்டு உணவு தேடிக்கொடுப்பார். இவ்வாறு சீவராசிகளிடம் கருணை காட்டும் ஒருவர் வேலாயுத பிள்ளை. இதனைத்தான் "கருணை காட்டும் உள்ளம் கடவுள் வாழும் இல்லம்" என்று ஞானிகள் கூறுவர். நாம் வாழும் வாழ்க்கையில் என்ன நல்லது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதித்தோம் என்று அடிக்கடி கூறுபவர். அவர் நல்ல நடத்தைகளை மற்றும் சிந்தனைகளைக் கற்றவர். உணர்ந்தவர். அமரர் இன்னும் சிலகாலம் இருந்து பணிகள் செய்யக் காலம் இடங்கொடுக்க வில்லை. அன்றைய நாளில் கூட உறவினருடைய பூப்புனித நீராட்டு விழாவில் கலந்து கொண்டவர். "பாயிற்கிடவாமல் நோயுற்றடராமல் - அவரை இறைவன் 06.12.2021 கார்த்திகை இருபதாம் நாள் திருதியை திதியில் அழைத்துக் கொண்டார். அவரது ஆத்மா இறைவனடியில் சாந்தி பெறுக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மலரானது எம்தந்தையாரின் முப்பத்தோராம் நாள் நினைவையொட்டி வெளியிட்ட ஒரு தொகுப்பு. இதில் அடங்கியுள்ள தொகுப்புகள் யாவும் நம்கற்ற அறிவில் விளைந்த சிறுகருத்துப் பதிவுகள்தாம். எமது தந்தையார் உயிராக அவ்வுடலில் இருக்கும் போதே இப்படியான தொகுப்பு ஒன்றை வெளியிடும் நோக்கம் இருந்ததாயினும் அதற்கு செயல்வடிவம் கொடுக்கும் உந்துதல் இல்லாமையால் அது தவறிப்போயிற்று. ஆயினும் அவரின் ஆத்மசாந்திக்கான பிரார்த்தனை நாளில் இத்தொகுப்பினை அவர் நினைவாகவே வெளியிடுவதன் மூலம் அவர் எம்வாழ்க்கைக்காக பட்ட சிரமத்துக்கு ஒரு சிறு நன்றியறிதலை தெரிவிக்கும் முகமாக இந்த நினைவுமலரை தொகுப்பாக்கியிருக்கிறேன். இந்த மலரைப் படிப்பவர்களின் தனிப்பட்ட கருத்துகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் முரணான சில கருத்துகள் கூட இந்தத்.தொகுப்பில் அடங்கி யிருக்கலாம். எனிலும், ஏதாவது ஒரு சூழ்நிலையில் ஒருவர் ”தன்னிலை (Self-realisation)" அறிய முற்படும்போது இந்தத் தொகுப்பு அவருக்கு ஒரு முதற்படியாக இருப்பதற்கு வாய்ப்பு களுண்டு. இந்தப்புரிதலோடு இந்த நினைவுமலரை எமது தந்தையாரின் சூக்குமபாதாரவிந்தங்களில் சமர்ப்பிக்கின்றோம். ·

## அடக்கம்


1. இந்தத் தொகுப்பில் உள்ளடங்கியவற்றுக்கான கருத்துப்புரிதல்
2. சைவசித்தாந்தமும் அதன் ஏற்பும்
3. மனம் பற்றிய சிறுவிளக்கம்
4. சைவசித்தாந்தம் - தத்துவங்கள்
5. சைவசித்தாந்தம் - முப்பொருள் விளக்கம்
6. சிவஞானபோதம் - ஆரம்பநிலை விளக்கம்
7. திருமந்திரத்தை விளங்கிக்கொள்தல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதவாழ்வில் மொழியின் தொழில் யாதெனில் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு ஒரு கருத்தையோ செய்தியையோ கடத்துதலேயாகும். இங்கு, தமிழன்னையின் துணைகொண்டு நான் பரிமாறவிருக்கும் கருத்துகளையும் செய்திகளையும் முழுமையாக அந்தத்தாய் கொண்டுசேர்ப்பாள் எனவுறுதி கொண்டு மேற்செல்கிறேன்.

## இந்தத் தொகுப்பில் உள்ளடங்கியவற்றுக்கான கருத்துப்புரிதல்

இம்மலரின் முன்னுரையில் குறிப்பிட்ட கருத்தை மீள் வலியுறுத்தும் முகமாக எனது "கருத்துப் புரிதலை (conceptual understanding)" இந்த தலைப்பின்கீழ் பதிவி முனைகிறேன். இங்கு நான் சொல்ல முற்படுவன யாவும் "கருத்துகளாக" இருக்குமிடத்து அவற்றை ஏற்பதும் தவிர்ப்பதும் வாசிப்பவர்களின் சுயாதீனத்துக்கு உட்பட்டது எனும் புரிதல் எனக்குண்டு. ஆயினும் இங்கு ஏற்படக் கூடிய சிறுசிக்கல் யாதெனில், இவ்வாறான கருத்துக்கள் எழும் இடத்துக்கும் அவை சென்றடையக்கூடிய இடத்துக்குமிடையில் 'மொழி' என்னும் ஊடகம் எத்துணை சிறப்பாக அந்தக்கருத்துக் களை செவ்வனே முழுமையாக கடத்துகின்றது, என்பதாகும். ஒரு சிறு எடுத்துக்காட்டுக்கு, நான் இங்கு 'உணவு' எனக்குறிப்பிடு கின்றேன் என வைத்துக்கொள்ளுங்கள். அக்கணத்தில் என்மனக் கண்முன்னே ஏதாவது ஒரு உணவு நினைவில் தோன்றி மறைகிறது. அது நிற்க, அதே சமயம் இந்தத்தொகுப்பை வாசிப்பவர் ஒருவரின் மனக்கண்ணில் அதே உணவு, அதே அளவு / பிரமாணத்தில், அதே தோற்றத்தில் வரவேண்டிய அவசியம் சற்றும் இல்லை. மாறாக, அவர் வேறொரு உணவை மனக்கண்ணில் பார்த்திருப்பார். எனவே, நான் குறிப்பிடவந்த 'உணவு' எனும் கருத்து, முழுமையாக அதை வாசிப்பவரை சென்றடையவில்லை என்பதே இங்கு உள்ள கருத்துப் புரிதலாகின்றது. மேலோட்டமாக வாசிப்பவர்களுக்கு இந்தக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துப்புரிதல் அவசியமா என்கிற குழப்பத்தைக்கூட விளை விக்கலாம். ஆனால் இந்தத் தொகுப்பில் அடங்கியவற்றை முழுமை யாகவோ அல்லது பகுதியாகவோ, ஏற்பதற்கோ அன்றேல் தவிர்ப்பதற்கோ இவ்வாறான கருத்துப்புரிதல் முற்றிலும் துணைநிற்கும் என்பதை தெளிவுபடுத்தவே நான் இங்கு விளைகின்றேன்.

## கருத்து என்பது என்ன?

"கருத்து" என்பதால் நான் விளங்கிக்கொண்டது யாதெனில், நாம் பிறந்தது தொட்டு இன்றுவரை நமது மதிகொண்டு நாம் புரிந்துகொண்டவை யாவுமே கருத்துகள்தாம், என்பதாகும். அதாவது, ஒரு கருத்து எப்போதுமே முழுமையான விளக்கத்தை சொல்லாது மாறாக, நம் அறிவுக்கு அது சிறுபுரிதலை கொடுத்துவிடும். அவ்வளவே.

எடுத்துக்காட்டாக, "சூரியன்" என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம். இதேசொல்லை ஒரு ஆங்கிலேயர், "sun" என்றவாறு குறிப்பிடுவார். இங்கு சூரியன் என்கிற சொல்லும் sun என்கிற சொல்லும் குறிப்பிடவந்தது ஒரே .பொருளையே. இங்கு சூரியன் மற்றும் sun என்கிற "வார்த்தைகள்" அந்தப்பொருள் ஆகா. ஆயினும் வேறுபட்ட மொழிகளில் கூறவந்த பொருள் வேறுபட்ட ஒலிப்பிரமாணங்களையும், தோற்றப்பிரமாணங்களையும் எடுக்கிறது. இன்னுமொரு எடுத்துக்காட்டை வேறு கோணத்தில் பார்க்கலாம். நாம் அடிக்கடி பயன்படுத்தும் சொல்லான "நான்" என்கிற சொல்லை எடுத்துக்கொள்ளலாம். இந்த "நான்" என்பது வேறுபட்ட மனிதர்கள் யாவரும் தங்களை சுட்டவல்ல "ஒரே வார்த்தையாகும்". முன்னைய எடுத்துக்காட்டில் இருவேறு மொழிச்சொற்கள் ஒரே பொருளை சொல்லவந்தன. இங்கு ஒரே மொழிச்சொல் வெவ்வேறு மனிதர்களை சுட்டி நிற்கின்றமையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணமுடிகிறது. எனவே இங்கு "நான்" எனும் சொல்கூட முழுமையாக ஒரு விளக்கத்தை கொடுக்கவில்லை. எனவே, "நான்" என்கிற சொல்கூட ஒரு கருத்து மட்டுமே. ஒருபடிமேலே சென்றால், "நான்" எனும் சொல் மேம்போக்காக எனது உருவத்தை குறிப்பிடுவதாக எடுக்கமுடியாது. அதுவே மெய்யெனில், நான் செய்யவிருக்கும் வேலைகளை என் உருவம் பதித்த படம் செய்யவல்லதா என்கிற கேள்வியெழும். அதற்கான விடையும் நமக்கு தெரியும். சரி, "நான்" என்பது எனது உடலை குறிப்பதா? அவ்வாறாயின், ஒரு புரிதலுக்காக, நீங்கள் விபத்தில் சிக்கி உடல் மயங்கி, நினைவுகளற்ற நிலையில் இருப்பதாக உருவகித்துக் கொள்ளுங்கள். இப்போது அந்த உடல் எழுந்து "நான்" என்று சொல்வதற்கு வழியில்லை. எனில், "நான்" என்பது இல்லை என்றாகிவிட்டதா? இல்லையே. "நான்" என்கிற இருப்பை உடல் உணரவில்லை என்பதைத்தவிர, "நான்" என்பது முற்றாக அற்றுப்போகவில்லை. எனவே, இவ்வாறான முழுவிளக்கம் தரமுடியாத 'பெயர்ச்சுட்டுக்கள்' தாம் கருத்து எனும் சொல்லால் அறியக்கிடக்கின்றன.

ஆகையால், இந்தத்தொகுப்பில் புகுத்தியுள்ளவை யாவும் இவ்வாறான கருத்துப்பொதிவுகளே என்கிற அடிப்படையில் அவற்றை வாசித்து தக்கவை என்று உணர்பவற்றை மட்டும் எடுத்துக்கொள்ளுங்கள். தகாதவற்றை விலக்குங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசித்தாந்தமும் அதன் ஏற்பும்

சைவசித்தாந்தம் என்கிற தமிழின் மிகவும் ஆழமான கடலுக்குள் நுழைவதற்கு முன்னர் இந்த சொல்லின் தோன் மத்தையும் அதன் தேவையையும் புரிந்துகொள்தல் அவசிய மாகிறது. இங்கு "சித்தம்" என்கிற வேர்ச்சொல்லின் குறைந்தபட்ச புரிதல் தேவைப்படுகிறது. அதன் மூலத்தை விளங்கிக்கொள்வதற்கு ஒருவர் தனது "மனம்" என்கிற மந்திரச்சிறையை அலசி ஆராயவேண்டும். ஏனெனில், மனிதருக்கு மட்டுமே மனம் என்கிற ஒரு சூக்குமசக்தி (ஐம்பொறிகளாகிய புறக்கருவிகளால் அறியமுடியாதவை) வலுத்துக்கிடப்பதாக அறிகிறோம். மனத்தை உடைவர்களே "மனத்தன்" என்றாகி பின்னர் அது மனிதனாக திரிபுற்றதாக ஒரு கருத்து நிலவுகிறது. அதன்வழி, மனம் என்கிற தூலமல்லாப் பொருளை விளங்க நாம் அந்த மனத்தையே இங்கு கருவியாக உபயோகிக்கவேண்டியுள்ளது. விஞ்ஞானத்தின் மூலம் ஒரு பொருளினின்று இன்னொரு பொருளை உருவாக்க முடிந்த மனிதனுக்கு, அந்தப்புதிய பொருளின் ஆக்கத்துக்கு இந்த "மனம்" என்கிற கருவி எந்த அளவுக்கு தன்பங்காற்றுகிறது என்கிற புரிதல் இல்லாமையே மனிதவர்க்கம் தன்னை மீறிய சக்தியை ஏற்றுக்கொள்ளாமைக்கான முதற்காரணமாகிறது. தமிழர் மரபில் உதித்து மறைந்த மெய்ஞ்ஞானிகள் (சித்தர்கள்) இந்த மனத்தின் சூக்குமத்தை உணர்ந்தமையால் மட்டுமே அவர்கள் சாதாரண மனிதர்களினின்றும் வேறுபட்டிருந்தமையை அவர்கள் காலத்தில் வாழ்ந்தவர்கள் மற்றும் கண்கூடாக பார்த்தவர்கள் சொல்ல கேட்டிருக்கிறோம். மேலைத்தேய வாழ்வை நாடி தினந்தினம் நம்நாட்டுக்குடிகள் புலம்பெயர்ந்துகொண்டிருக்கும் இந்தக் காலத்திலும், அந்த வாழ்வை விட்டுவிலகி வந்த மேலைத்தேய அறிஞர்களும் தேடலுள்ளவர்களும் தற்போதைய இந்தியாவையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் சூழ உள்ள பிராந்தியங்களையும் (கீழைத்தேசங்கள்) தேடியலைந்து தங்கள் அமைதியை தக்கவைத்துக்கொண்டார்கள் என்பதை இன்றைய நூல்கள் வாயிலாக அறிகிறோம். அவர்களில் ஒருவரே ஈழத்தின் யோகர் சுவாமியின் சீடராகிய சிவயசுப்பிர முனியசுவாமி என அறியப்பட்ட Robert Hansen (United States) அவர்கள். அதில் சிலர், தங்கள் மனவமைதியைத்தாண்டி இந்தக் கீழைத்தேய கலாசாரங்களில் அப்படி என்னதான் இருக்கின்றது என்கிற தேடலில் பிரயாணம் செய்து இங்கு வந்து பின்னர் அறிவுத்தெளிவு பெற்றுச்சென்றிருக்கிறார்கள் என்பதை அவர்கள் நூல்கள் (A Search in Secret India by Paul Bruntun) வாயிலாகவே தெரியப்படுத்தியிருக்கிறார்கள். எனில், அத்தகைய அறிவை இங்கு பொதித்து வைத்திருந்தவர்கள் யார் என்கிற கேள்வி எழுகிறது. அவர்கள் வேறுயாருமல்ல, சந்தேகத்துக்கிடமின்றி சித்தம் தெளிவு பெற்ற சித்தர்கள்தாம். அவர்கள் சித்தம் தெளிந்தகாரணத்தினா லேயே சித்தர்கள் என அறியப்பட்டார்கள். அந்த தெளிவு சித்தத்தில் தான் வரவேண்டும் என்கிற அடிப்படை எங்கிருந்து பிறந்தது என அறிய முற்படுவோமேயானால் சித்தாந்த மரபின் தேவை சிறிதே நம் அறிவுக்குப்புலப்படும்.

ஒரு பொருளின் அல்லது கருத்தின் ஆழத்தை புரிந்து கொள்வதற்கும் அதை மக்கள் மத்தியில் சான்றுகளோடு முன்வைப்பதற்கும் முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு “ஆய்வு” (Research) என்கிற பதத்தைப் பாவிக்கின்றனர். அவற்றில், பெரும்பாலானவை உலகியல்வாத (materialistic aspect) ஆய்வு களாகவே இருக்கின்றன. மேலும், இவ்வாறான ஆய்வுகள் வெறும் கல்வித்தகைமைகளை பிரதிபலிக்கும் பெயரளவிலான ஆய்வு களாகவே மட்டுப்பட்டு நிற்கின்றன. இலட்சங்களில் ஓரிருவர் மட்டுமே தங்கள் வாழ்நாள் முழுவதும் ஆய்வுக்காக செலவு செய்து அந்த ஆய்வுகளில் வெற்றி கண்டிருக்கின்றனர். பொதுவாகவே, தூலப்பொருட்களின் ஆய்வு ஒருவருக்கு எல்லையற்ற ஆனந்தத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமுடியாது. ஆனால் சூக்குமப்பொருட்களான மனம், உயிர் பற்றிய ஆய்வுகள் ஒருவருக்கு அவற்றின் எல்லைகளை காட்டாத பட்சத்திலும் கூட அதை முன்னெடுப்பவர்களுக்கு ஒருவகை ஆனந்தத்தை தருகிறது. இங்கு "ஆனந்தம் (Bliss)" என்கிற சொல்லாடல் தமிழின் ஒரு சிறப்புச்சொல்லாடல். அந்தச்சொல் மகிழ்ச்சியை தராது, துக்கத்தையும் தராது. மாறாக ஒருவகையான, நிலைத்த, மனத்தின் நிலையை (state of mind) தரவல்லது. இந்த நிலையில் மட்டுமே ஒருவருக்கு "போதும்" என்கிற திருப்தி நிலை எட்டப்படுகிறது. இந்தநிலை ஒரு மாறாதநிலையாகவும் இடையறாத தாகவும் (incessant) இருப்பதன்கண் அதற்கான தேடல் ஒவ்வொரு மாந்தரிலும் என்றோ ஒருகாலத்தில் வெளிப்படக்கூடிய ஒரு பொருளாக இருக்கிறது. அது எப்போது என்பதும், எதனால் என்பதும் அவரவர் வாழ்க்கையில் நிகழும் சந்தர்ப்பசூழ்நிலைகள் தீர்மானிக்கின்றன. இவ்வாறிருக்க, இவ்வுலகில் சூக்குமப் பொருட்களை (ஐம்பொறிகளாகிய புறக்கருவிகளால் அறிய முடியாதவை) எவ்வாறு விளங்கிக்கொள்வது? அதனை எவ்வாறு ஆய்வு செய்வது? இவ்விடத்தில்தான் நாம் "மனம்" என்கிற பரந்து விரிந்த எல்லையற்ற வெளிக்குள் பிரவேசிக்கவேண்டியுள்ளது.

மனம் - மனிதப்பிறப்பின் அளப்பரிய கொடை. இவ்வுலகில் "மனத்தர்களாக" பிறந்த நாம் அந்த மனத்தின் வேரைத் தேடாமலேயே வெறும் உலகியல்வாதிகளாகத்திரிந்து அவற்றினுள் உழன்று ஏன், எதற்கு, எப்படி இவ்வுலகில் நாம் வந்தோம் என்கிற நோக்கங்களை அறியாமலேயே மடிகின்றோம். இதற்குக்கூட, சிலர் இந்தக்கேள்விகள் அவசியம்தானா? என்கிற தமது சொந்தக்கருத்து களை முன்வைப்பார்கள், அதில் தவறில்லை. ஆனால், அவர்கள் யாவருமே பொதுவாக தமது வாழ்நாளில் இன்பம்-மகிழ்ச்சி-சுகம் (comfortness) என்கிற ஒருபகுதியை மட்டுமே பார்த்தவர்களாக இருப்பார்கள் என்பதில் எனக்கு துளியளவும் சந்தேகமும் இல்லை. மாறாக, இதன் எதிர்த்தன்மைகளான துன்பம்-துயரம்-துக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றை பார்த்தவர்கள் அந்த சந்தர்ப்பத்தில் இவ்வாறான தேடல்களை தாமாக வலிந்து முன்னெடுப்பார்கள். இதுதான் நிதர்சனமான உண்மை. இந்த மனத்தை நான்கு கருத்தியல் கூறுகளாக்கி விளக்குவார்கள். அதாவது, மனம், புத்தி, சித்தம் மற்றும் ஆங்காரம் என்பனவே அவை. அதில் மனம் என்பது நம் ஐம்புலன்களால் அறிபவற்றை சேமிக்கும் தொழிற்பாடு. புத்தி என்பது, முன்னமே ஐம்புலன்களால் அறிந்தவற்றை ஆராய்ந்து அவற்றின் நன்மை, தீமைகளை எடைபோடும் செயற்பாடு. ஆங்காரம் என்பது, சுருங்கச் சொல்லின் இவ்வுடல் மற்றும் மனதை "தான்" எனத்தவறாக எண்ணும் ஒரு பொருள். சித்தம், என்பது முன்னமே பதிவுசெய்யப்பட்ட அறிவு. எடுத்துக்காட்டாக சொன்னால், ஒரு குழந்தைக்கு கையில் எடுக்கும் பொருள் ஒன்றை சுவைக்க அதை வாயில்தான் வைக்கவேண்டும் என்பதை யாரும் சொல்லித்தர வேண்டியதில்லை. இது ஒரு சிறிய எடுத்துக்காட்டே. இவ்வாறாக, சித்தம் என்பதை நல்ல பதிவுகளாக்கி பிறந்தோருக்கு தானாகவே தெளிவான சிந்தனையோட்டங்கள் இருக்கும். அவர்களுக்கு எது சரி, எது பிழை என்கிற தெளிவும் எது மெய், எது பொய் என்கிற தெளிவும் தானாகவே அமைந்துவிடும். இதனால்தான் அறிஞர்கள் யாவரும் சித்தம் சிவமய்மாக வைத்திருக்க வேண்டும் என்கிற அடிப்படையை போதித்து இருக்கிறார்கள். தமிழ்மூல மந்திரமாகிய திருமந்திரம் பின்வருமாறு போதித்திருக்கிறது.

**சித்தந் திரிந்து சிவமயமாகியே**
**முத்தந் தெரிந்துற்ற மோனர் சிவமுத்தர்**
**சுத்தம் பெறலாக ஐந்தில் தொடக்கற்றோர்**
**சித்தம் பரத்தின் திருநடத்தோரே – திருமூலர்**

சிவத்தைப்பற்றியே எக்கணமும் சிந்தித்து சித்தமெலாம் சிவமயமாகி இருக்கவல்ல முத்தி பெற வழி தெரிந்தவர்கள், மௌனமே அதற்கான ஒரேவழியென்றறிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்வழி நின்று ஐம்புலன்களால் அறியப்படும் அறிவுத்தொடர்பு களை அறுத்து தங்கள் சித்தத்தை சுத்தமாக வைத்திருப்பர். அவர்களே சித்தம் என்கிற அம்பரத்தில் (பெருவெளி) சிவத்தின் ஆடலைக்காணவல்லோர்.

எனவே, சித்தத்தில் தெளிவு பெறலே அருள்ஞான முத்திக்கு ஒரேவழியென்றறிந்து அந்த தெளிவுபெறும் நோக்கில் அமைக்கப் பட்டவையே சித்தாந்தமரபுகளாகும். இம்மரபுகளை சமயநோக்கில் பாராது தெளிவுநோக்கிய நூல்களாக எடுத்துநோக்கில் சைவ சித்தாந்த வழிநின்ற நூல்கள் யாவும் எப்போதுமே மனித வாழ்க்கைக்கு பூரணத்துவமும், அமைதியும் தருவனவாகும்.

ஆறறிவு ஆறறிவு என்று அடிக்கடி பேசுகின்றோம். ஆறறிவு என்றால் என்ன என்பதை அறிந்து கொள்வோம். தன்னை உணர்வது முதலாவது அறிவாகும். தன்னவர்களை உணர்வது இரண்டாவது அறிவாகும். பிறதினை அறிவது மூன்றாவது அறிவாகும். உணர்வுகளை அறிவது நான்காவது அறிவாகும். இயற்கையை அறிவது ஐந்தாவது அறிவாகும். இந்த ஐந்து அறிவுகளும் அனேகமாக எல்லாவற்குமே இருப்பததாகும். ஆறாவது அறிவு என்பது தான் கடவுளை அறிவதாகும். அவ மனிதர்களிடம் இருக்க வேண்டுமென்ற இறைவன் விரும்புகின்றான் இல்லாதவர்கள் ஐந்தறிவு உள்ளவர்களன் வரிசையிலேயே சேர்க்கப்படுகிறார்கள் எனவே இந்த ஆறு அறிவுகளையும் பெற்றுக்கொண்டு நாம் இறைவனை அறிவோமானால் அடுத்ததாக இருக்கின்ற இறைவனை நெருங்குகின்ற ஞானநிலை யோகநிலை என்பவற்றை அடைந்துவிடலாம் எனவே அறுஅறுவு என்றால் அந்த ஆறு அறிவும் எவை என்பதை அறிந்து கொண்டு சுபீட்சம் அடைவோமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் பற்றிய சிறுவிளக்கம்

**மலாங்கப்புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய**
**விலாங்கு(ம்) மனத்தால் விமலா உனக்கு**

**- திருவாசகம்**

இது மணிவாசகர் கூற்று. "எனது ஐந்து புலன்களாகிய மெய், வாய், கண், மூக்கு மற்றும் செவி அனைத்தும் என்னை ஏமாற்றி உண்மைப்பொருளை மழுங்கடித்துக் கொண்டிருக்க, தன்நெறியினின்றும் தவறி ஓடவிளைகின்ற மனத்தால்" என்கின்றவாறு விவரிக்கின்றார். (மலங்க - குலைகின்ற, மழுங்கடிக்கின்ற் விலங்கும் - விலகும் என்பதிலிருந்து தோற்றியது). சில சமயங்களில் விலங்கு மனத்தால் என்பதை சிலர் "அணுவளவும் விடாது இறுகப்பற்றிய மனத்தால்" எனவும் பொருள்பட விவரிப்பர். எது எவ்வாறாயினும் இங்கு "மனம்" எனும் பொருளின் அடிப்படை இலக்கணங்களை புரியவேண்டிய அவசியம் உண்டாகின்றது.

இந்தக்கட்டுரையை மேலெடுத்துச் செல்வதற்கு, நாம் சில அடிப்படைக் கேள்விகளை உற்றுநோக்கி பரீட்சிக்க வேண்டியுள்ளது. உதாரணமாக,

- ❖ மனம் என்றால் என்ன?
- ❖ மனம் எங்கிருந்து தோற்றுகின்றது?
- ❖ மனத்தை இயக்குவது எது?
- ❖ மனம் எப்போது மறைகின்றது? அல்லது ஒடுங்குகின்றது?
- ❖ மனத்தின் உட்கட்டமைப்பு எப்படிப்பட்டது? அல்லது அதன் பிரிவுகள்தான் என்ன?
- ❖ மனத்தின் தன்மைகள் என்ன?

என்னும் பலவிதமான கேள்விகளை ஆய்வுசெய்ய வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் மனம் என்றால் என்ன என்பதை விவரிக்கும் சில சித்தர்களினதும், ஞானிகளதும், பெரியவர்களதும் கூற்றுக்களைப் பார்க்கலாம்.

**நினைப்பதொன்று கண்டிலேன் நீயலாது வேறிலை**
**நினைப்புமாய் மறப்புமாய் நின்ற மாயை மாயையோ**
**அனைத்துமாய் அகண்டமாய் அநாதிமுன் அநாதியாய்**
**எனக்குள் நீ உனக்குள் நான் நினைக்குமாறதெங்ஙனே**

**- சிவவாக்கியர்**

இந்த வரிகளில் மனத்தினைப் பற்றிய விளக்கத்தை தெளிவாக நான்கே வரிகளில் சிவவாக்கியர் விவரித்து விடுகின்றார். மனம் என்பது ஒரு மாயை எனவும் அதன் செயற்பாடுகள் நினைத்தலும் மறத்தலும் எனவும் விவரித்து அந்த மனத்தினுள் நீயும், அதேசமயம் அந்த 'உன்'னுள்ளே நானுமாக இருக்கும்போது வேறானவற்றை நினைப்பது மட்டும் எப்படி சாத்தியமாகும்? எனவியந்துரைக்கின்றார். இந்த விவரணத்தை மீண்டும் பின்னர் வரும் விளக்கங்களில் ஆளமாகப் பார்ப்போம்.

**பற்றற்று நீரில் படர்தாமரை இலைபோல**
**சுற்றத்தை நீக்கி மனம் தூரநிற்பது எக்காலம்?**

**- பத்திரகிரியார்**

தாமரை இலையில் தங்காத நீர்த்துளிகள் போல, மனமானது தன் சுற்றத்தை விட்டுவிட்டு தூரவிலகி நிற்பது எப்போது எனச்சோர்ந்து கேள்விஎழுப்புகின்றார். இதன்மூலம், மனம் என்பது தன்னைச் சூழவிருப்பனவற்றை சார்ந்தே நிற்கும் ஒரு பொருள் எனவும் விலகி நிற்கமுடியாத ஒன்று எனச்சாடுகின்றார். எவற்றையும் சாராதிருக்கையில் மனத்துக்கு உயிரில்லை. எனில் மனம் என்கிற வார்த்தைக்கே தேவையற்றுப்போகின்றது.

**மனம் என்பது ஆத்ம சொரூபத்திலுள்ள ஓர் அதிசய சக்தி. அது சகல நினைவுகளையும் தோற்றுவிக்கின்றது. நினைவுகளை யெல்லாம் நீக்கிப் பார்கின்றபோது தனியாய் மனம் என்றோர் பொருள் இல்லை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்த தேகத்தில் 'நான்' என்று கிளம்புவது எதுவோ அதுவே மனமாம்**

**- பகவான் இரமண மகரிஷி**

**மனதை அடக்க முயன்றால் அலையும், அறிய முயன்றால் அடங்கும்**

**- வேதாத்திரி மகரிஷி**

ஆக, மனம் என்பது ஒரு விளக்கமுடியாத மாயைப் பொருளாகவும், எப்போதும் எந்தவொன்றையும் பற்றி நிற்பதாகவும், ஒரு நிலையில்லாமல் அலைபாய்ந்த வண்ணம், தோற்றுவதாயும் மறைவதாயும் பலவாறாக சித்தரிக்கப்பட்டுள்ளது. இத்தன்மைகளை சிறிதே ஆராய முற்படுவோம்.

ஓய்வாக உள்ளவேளைகளில் மிகவும் அமைதியான சூழலில் உங்களுக்குள்ளே முன்னர் குறிப்பிட்ட கேள்விகளை திரும்பத்திரும்ப கேட்டுப்பாருங்கள். முதல் முயற்சியில் யாருக்கும் இதன் விடைகள் கிடைக்கப்பெறாதென்பதே உண்மை. ஆனால் தொடர்ச்சியான முயற்சியின் இறுதியில் சிறிதே புலப்பட ஆரம்பிக்கும். உண்மையில் பகவான் இரமணர் குறிப்பிட்டதைப் போல நினைவுகள் யாவற்றையும் நீக்கிப் பார்க்கும்போது தனியாய் மனம் என்றோர் பொருள் இல்லை என்பது புலப்படும். எம்நினைவுகள்தான் மனதின் கர்த்தா என்பது தெளிவாகும். நினைவுகள்தாம் மனம் என்கின்ற ஒன்றைக் கட்டமைக்கின்றன.

நினைவுகள் எனும்போது கண்டிப்பாக அவை நிகழ் காலத்தில் இருக்க முடியாது என்பது தெட்டத்தெளிவாகின்றது. ஏனெனில், நிகழ்காலத்தை நாம் அனுபவமாக உணரமுடியுமே யன்றி 'நினைவு' எனும் வரையறைக்குள் கொண்டுவர இயலாது. ஒவ்வொரு கணங்களும் நிகழும் காலத்தை கடந்து செல்லும்போது அந்த நிகழ்கால அனுபவங்கள்தான் நினைவுகளாக, அதாவது தரவுகளாக, நம் மூளையின் பகுதிகளில் சேமிக்கப்படுகின்றன. அனுபவங்கள் எனும்போது அவை எமது புலன்வழிப்பெறும் அனுபவங்களையே சுட்டி நிற்கின்றன. கண்ணால் உணரப்படுகின்ற காட்சிகளும், செவியின் வழிச்செல்லும் ஒலிகளும், மூக்கால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணரப்படும் நுகர்ச்சிகளும், வாயால் உள்ளெடுக்கப்படும்போது உள்ள சுவையுணர்வுகளும் மற்றும் நம் உடம்பின் ஸ்பரிசத்தின் பால் உணரப்படும் உணர்ச்சிகளும் எமது மூளையின் பகுதிகளில் தரவுகளாக சேமிக்கப் படுகின்றன.

இலகுவான விளக்கத்துக்கு, உதாரணமாக, நீங்கள் ஒரு மலைப்பாங்கின் மத்தியில் உள்ள அருவியின் வீழ்ச்சியை பார்த்துக்கொண்டிருப்பதாக பாவனை செய்துகொள்ளுங்கள். அந்த நீர்வீழ்ச்சியில் உருவாகும் அந்த பிரவாகத்தின் அழகு உங்கள் கண்களை கொள்ளை கொள்கின்றது. அங்கு உருவாகும் "சோ"வென எழும் அருவியின் ஓசை காதுகளில் ஊடு புகுந்து உங்களை கிளர்ச்சியுற வைக்கின்றன. நீரின் தெறிப்பில் உருவாகும் சிறுதிவலைகள் மேகக்கூட்டமென பொங்கியெழுந்து காற்றில் மிதந்து வந்து உங்கள் உடலை "சில்" லெனக் குளிர்விக்கின்றன. இந்த அனுபவத்தில் நீங்கள் உங்களை மறந்து மெய்சிலிர் கின்றீர்கள். இந்தத்தருணத்தை சற்றே கற்பனை செய்து பார்ப் போமேயானால், அவற்றை மிகவும் அனுபவமாக உள்ளெடுக்கும் ஒருவருக்கு அங்கு வேறு சிந்தனைகளுக்கு இடம் இல்லை. சிந்தனைகளுக்கு இடமில்லாத பட்சத்தில்தான், நாம் பின்னர் வேறொருவரிடம் பேசும்பொழுது "நான் அந்த அழகில் என் மனதையே தொலைத்து விட்டேன்" என்று அந்த அழகிய காட்சியை விவரிக்கின்றோம். அதாவது, நிகழ்காலத்தை நாம் அனுபவரீதியாக ரசிக்கும் காலத்தில், நினைவுகள் தோற்றாத அத்தருணத்தில் "மனம்" என்னும் பொருளுக்கு அவ்விடத்தில் பேச்சே எழாது. இதிலிருந்து மனம் என்பது நிகழ்காலத்தை அனுபவிப்பவர்களுக்கு வெளிப்படாத ஒன்று என்பது தெளிவாகின்றது. இருக்க, நினைவுகள் சேமிக்கப்படும் பகுதியாக மூளை செயற்படுங்கால், நினைவுகளின் உற்பத்தியே மனத்தின் பிறப்பிடமா? எனும் கேள்வி எழுகின்றது. அதாவது எமது மூளையின் இருப்பிடமான சிரசிலிருந்தே மனம் தோற்றுகின்றதோ என்கின்ற தோற்றப்பாடு உருவாகின்றது. இது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிதே சிந்திக்க வைக்கின்ற ஒரு கேள்வி. ஏனெனில், சிரசிலமைந்த மூளையினின்றும் மனம் தோற்றுகின்றது என்றால், நாம் எதற்காக "உங்கள் மனதைத் தொட்டுச் சொல்லுங்கள்" என்று நெஞ்சில் கைவைத்து சொல்கின்றோம். அல்லது, நமது தேவாரங்களிலோ, புராண, இதிகாசங்களிலோ "இதயக்குகை" என்றும் "அகம்" என்றும் "நெஞ்சம்" என்றும் பலவாறாகக் குறிப்பிட்டு சொல்வது எதனை? இங்குதான் மேலும் சில சுவாரசியங்கள் பொதிந்துள்ளன. அவற்றை ஒவ்வொன்றாகக் கீழே பார்க்கலாம்.

அடிப்படையில் மனமானது நினைவுகளினின்றும் வெளிப்படினும் அதன் செயற்பாடுகளின் மூலம் மனமானது நான்கு தற்பண்புகளை கொண்டிருக்கின்றது. இவ்வாறான செயற்பாடு களின் விளைவாக மனத்தினை அந்தக்கரணங்களாக உருவகித்து அவற்றினூட விளக்க முற்பட்டனர் நம் சான்றோர்கள்.

**சத்தமுஞ் சத்த மனனுந் தகுமனம்**
**உய்த்த வுணர்வு முணர்த்தும் அகந்தையுஞ்**
**சித்தமென் றிம்மூன்றுஞ் சிந்திக்குஞ் செய்கையுஞ்**
**சத்தங் கடந்தவர் பெற்றசன் மார்க்கமே**


**- திருமூலர்**

இந்தப்பாடல் மூலம், சத்தம் முதலிய பஞ்சேந்திரியங்களால் நுகரப்படும் மனமும், மனத்தின் குழப்பங்களை அலசி ஆராய்ந்து சொல்லும் புத்தியும், உய்த்து எழுச்சிபெற்று உணர்த்தி நிற்கும் அகந்தையாகிய மூன்றும் என்கின்றவாறு தனியாக சொல்லிய திருமூலர் சிந்திக்கும் சித்தமாகிய செய்கையை நான்காமவதாக உரைத்து நிற்கின்றார். இவையனைத்தையும் பஞ்சேந்திரியங் களைந்தையும் கடந்து நின்றவர் மார்க்கமே சரியானதென்று விளக்குகின்றார்.

கரணம் என்றால் செயல் அல்லது செயற்பாடு என்று பொருள்படும். கீழுள்ள வரைபடத்தை சற்றே விளங்க முற்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**விளக்கப்படம்: அந்தக்கரணங்களின் உத்தேச அமைப்பு**

மேற்காட்டிபடி "மனம்" எனும் சொற்குறிப்பு அந்தக் கரணங்கள் என்னும் நான்கு பிரிவுகளாக அதன் செயற்பாடுகளின் நிமித்தம் விரிந்து நிற்றலை காணலாம். அந்தச்செயற்பாடுகளை ஒவ்வொன்றாக பார்க்கலாம்.

அ) மனம் எனப்படுவது, ஒரு உடம்பு தன்முன்னே நிகழும் நிகழ்ச்சிகளை அனுபவமாக ஆய்வுசெய்தோ/செய்யாமலோ உள்வாங்குகின்ற இயல்பாகும். அதுவே ஒரு பொருளைப்பற்றி இன்னொருவர் வாயிலாக அறிய முற்படும்போதும்
அனுமானத்தின வாயிலாகவோ கருதுகோளின் அடிப்படை யிலோ நினைத்தும் கற்பனை செய்துகொண்டும் உள்வாங்கிக் கொள்கிறது. எனவே மனதின் முக்கிய செயற்பாடுகளாக புறவுலக நுகர்ச்சி, நினைப்பு, மறப்பு, ஐயப்பாடு மற்றும் கற்பனை செயற்பாடுகளைக்கூறலாம். சுழலிடை சிக்கும் காற்றாடிபோல் மனமானது புறவுலக நுகர்ச்சிகளின் பின்னால் சஞ்சரிக்க முயலும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) புத்தி எனப்படுவது, பகுப்பாய்வு அல்லது நல்லது கெட்டதுகளை பிரித்தறியும் செயற்பாடுகளை புரிவது. இதுவே அறிவென்றும், பகுத்தறிவென்றும், ஆறறிவென்றும் சுட்டப்படும். மனத்தினால் உள்வாங்கப்படும் தரவுகள் யாவற்றினையும் நல்லன கெட்டன எனும் கோணங்களில் பரிசீலிக்கும் இயல்புதான் புத்தியின் வினை.

இ) சித்தம் எனப்படுவது, தேவையான அனுபவங்களின் சேமிப்புப்பகுதியாகும். அதுமட்டுமன்றி முன்னமே அறிந்த அறிவு என்றும் கொள்ளப்படுதல் வேண்டும். புத்தியால் ஆற்றப்படும் நல்லன கெட்டனவற்றை ஆராய்ந்து முன்னிறுத்துவது சித்தத்தின் தொழிற்பாடேயாகும். முன்னர் நடந்தனவற்றையும் தற்போது எம்மைச் சுற்றி நடந்து கொண்டிருக்கும் அனுபவ உணர்ச்சிகளை சேமித்து வைக்கும் செயற்பாடே இதுவாகும். சேமிக்கையில் எமது விருப்பு-வெறுப்பு மற்றும் நல்லன-கெட்டன எல்லாவற்றையும் வேறுபாடின்றி சேமிப்பதே சித்தத்தின் இயல்பு. எமது குணவியல்புகளை தீர்மானிக்கும் ஆற்றல் சித்தத்தின்கண் இருக்கின்றது. அந்தக்கரணங்களில் மிகுந்த சிறப்புமிக்கது சித்தமேயாம். அதனால்தான் திருமந்திரத்தில் பின்வருமாறு குறிப்பிடப் படுகின்றது.

**பித்தன் மருந்தால் தெளிந்து பிரகிருதி**
**உய்த்து ஒன்றுமாப்போல் விழியும் தன்கண்ஒளி**
**அத்தன்மை ஆதல்போல் நந்தி அருள்தரச்**
**சித்தம் தெளிந்தேன் செயல் ஒழிந்தேனே**

**- திருமூலர்**

இப்பாடல் மனிதவாழ்க்கையின் தெளிவின்மையை அற்புத மாக விளக்கி நிற்கின்றது. பித்தன் ஒருவன் மருந்துண்டு இயல்பு நிலைக்கு திரும்புமாப்போலவும், விழியில் திரைபடர்ந்து பார்வை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கியிருந்த கண்ணுக்கு மறுபடியும் ஒளி கிடைக்குமாப்போலவும் நந்தியாகிய சிவன் அருளால் யானும் "சித்தம்" தெளிந்தேன், அவ்வண்ணமே என்செயல் ஒளிந்தேனே என்று முடிக்கின்றார். இங்கு "செயல் ஒழிதல்" என்பது தனியே புறச்செயற்பாடுகளை ஒழித்தல் மட்டுமன்றி மனத்தினால் ஆற்றப்படும் அகச்செயற்பாடு களையும் சுட்டி நிற்றலை நோக்குக. அதற்கு சித்தம் தெளிதலே சிறந்த மருந்தென்று அருமையாக விளக்கி நின்றது. மேற்காட்டிய விளக்கப்படத்தின் விளக்கமும் இதுவே. எமது பஞ்சேந்திரியங் களால் உட்பிரவேசிக்கும் அனுபவ ஒளியானது மனம், புத்தி, மற்றும் அகங்காரம் எனும் மூன்றினதும் வசப்பட்டு அவற்றினூடுட்புகுந்து சித்தமாகிய சேமிப்பில் நிலைபெறுகின்றது. அந்த அனுபவங்களை மீண்டும் நுகர சந்திக்க நேரிடுகையில், இந்த சேமிப்புகளில் இருந்து புறப்படும் அனுபவவெளிப்பாடுகள், புத்தியின்வாய் பரிசீலக்கப் பட்டு அகங்காரக்கண் அகப்பட்டு புறநடவடிக்கைகளில் ஈடுபடு கின்றது. எனவேதான் சித்தத்தின் சேமிப்புகள் நல்லனவாயிருத்தல் அவசியம். சிந்தை தெளிந்தவர்க்கு எல்லாம் சிவமேயாகும். நம்முன்னோர் சிவமென்று குறித்து நின்றது அந்த தனித்து நிற்கும் அறிவையேயாகும். இதன் சொரூபம் "சத்து-சித்து-ஆனந்தம்" என்கின்ற சச்சிதானந்தமாகும். உயிர்ப்பு நிற்கும் இடமே சித்தத்தின் இடமாகையால், எம்பிராணனின் அசைவிடமாகிய நெஞ்சத் தினையே, நாம் மனத்தின் தோற்றிடமாக அறிகின்றோம். மேலும் இவ்விடத்தில் இன்னொன்றையும் தெளிவுபட விளங்கியிருத்தல் அவசியம். இவையாவும் சேர்ந்த செயற்பாடே மனமாகும்.

ஈ) அகங்காரம்

இதனை ஆங்காரமென்றும், முனைப்பு அல்லது தன் முனைப்பு என்றும் மற்றும் "நான்" என்றும் அறிஞர் பலவாறாக கூறுவர். ஆனால் இந்த "நான்" என்பது பொதுவாக உடல்-மனம் சேர்ந்த செயற்பாடாகவே எமக்கு தோற்றும். வேறுபடுத்துவது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடினமான காரியம். உதாரணத்துக்கு, எம்முடல் கொண்டு ஒரு வேலையை செய்கையில், "நான் உண்டேன்", "நான் உறங்கினேன்", "நான் எழுந்தேன்" என்று இந்த உடம்பின் தொழிற்பாடுகளை கூறுவோம். அதேசமயம், அந்த உடம்பை ஒருபடி மேலாக "இந்த வேலைகளை உனக்கு செய்ய சொன்னது யார்?" என்று நாம் வினவினால், பொதுவான விடையாக "என் மனம் சொன்னது" என்பதாகத்தான் இருக்கும். ஆகவே, நான் என்பது பொருள் உடம்பு-மனம் கூட்டாக சேர்ந்து வருகின்ற ஒரு பொருளாகும்

இதனை சற்றே உற்று நோக்குவோமேயானால், இந்த "நான்" எனும் போலியான தோற்றம் தோற்றாவிடின் இவ்வுலகில் யாருக்கும் எந்தவொரு பொருள் மீதும் பற்றோ சொந்தங் கொண்டாடும் எண்ணமோ உருவாகாது. இதுவே அனைத்துக்கும் ஆதாரமான பந்தப்பொருளாகும். நான் என்கின்ற 'தன்மை' உருவாகாவிடின், இவன், இது, இவள் என்கின்ற முன்னிலைப் பொருட்களும் அவன், அது, அவள் என்கின்ற படர்க்கைப் பொருட் களும் உருப்பெறா. பிறந்த குழந்தை ஒன்றுக்கு இந்த அகங்காரம் என்பது உடனேயே வலுப்பெறாது. அக்குழந்தை ஒரு வெள்ளை வெற்றுத்தாளாகவே ஆரம்பத்தில் இருக்கும். நாளாக நாளாக, அதன் பெற்றவர்கள் சூட்டிய பெயர் கொண்டு அழைத்துவருங்கால் அக்குழந்தை தன்பெயர் கொண்ட அவ்வுடம்பினையே மெய்யான 'நான்' என்றும் அவ்வுடம்பினுள்ளமைந்த மனத்தையும் கூட்டாகக் கொண்டு இவ்வுலகில் நன்மை தீமைகளைப் புரிய ஆரம்பிக்கின்றது. அங்கிருந்து ஆரம்பிக்கும் இவ்வுலக வாழ்க்கை அக்குழந்தையின் உண்மை சொரூபத்தை மறைக்கடிக்கின்றது. இவ்வுலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் 'நான்' என்கின்ற இந்த அகந்தையை ஒழித்து அதிலிருந்து மீண்டு வருவதே முன்னிலைப்பெற்ற நோக்காக இருக்கவேண்டும். இதனையே ஆன்ம ஈடேற்றம் என்று கூறுவர். வாழ்க்கையின் முதல் நோக்கம் ஆன்ம ஈடேற்றம் மூலமான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொரூபத்தை உணர்வது ஒன்றே. வேறெந்த வழிகளாலும் இந்த வாழ்க்கைக்கடலை கடக்க இயலாது. ஆன்ம ஈடேற்றத்துக்கு மனத்தை ஒருமுகப்படுத்தினால் மட்டுமே அது சாத்தியமாகும்.

எனில் இந்த மனதை கையாள வழிகள்தான் என்ன? ஆம், இங்குதான் நாம் மனத்தின் நான்கு செயல்நிலைகளான மனம், புத்தி, சித்தம் மற்றும் அகங்காரம் என்னும் பிரிவுகளை உணர்ந்து அவற்றை கைவசப்படுத்த நினைக்கவேண்டும். நாம் முன்னர் பார்த்ததுபோல, இந்த புறக்கரணங்களால் நாம் உணரும் இந்த உலகப்பொருட்கள்யாவும் நல்லதாக அமைந்தால் எமது சித்தத்தில் பதிவுபெறும் தகவல்கள் யாவும் நல்லெண்ணம் சார்ந்ததாக அமையும். எமது காரியங்களை ஆற்றும்போது நமது புத்தியால் எடுக்கப்படும் தேர்வுகளும் நல்லதாக அமையும். அதன்போது நமது அகங்காரமாகிய 'நான்' எடுக்கும் காரியங்களும் நல்லதாக அமைய வாய்ப்புண்டு. இதை விடுத்து தீமையான புறக்காரணிகளின் ஈடுபாடுகள் அதிகமாயிருப்பின் எமது செயல்விளைவுகளும் தீயதாக அமையும்.

ஒருவர் தன்மனதை வசப்படுத்துவதற்கு, மேற்கூறிய அதன் அடிப்படைத்தன்மைகளைப் புரிதலால் மட்டுமே முழுமையாக அதை செயற்படுத்தமுடியும். இவ்வாறு மனத்தை வசப்படுத்தும் ஒரு உயிர் தன்பிறப்பின் காரண, காரியங்களை அறிந்து வாழ்க்கையை செம்மைப்படுத்த எத்தனிக்கும். செம்மைப்பட்ட ஒரு உயிர் தன்னால் மற்ற உயிர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் தன் வாழ்க்கையை நெறிப்படுத்தி தன்வாழ்க்கையை அர்த்தமுள்ள தாக்கி இப்பருவுலகை விடுத்து பரத்தைச் சேரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசித்தாந்தம் - தத்துவங்கள்

சைவசித்தாந்த மரபென்பது இந்த பிரபஞ்ச தத்துவத்தில் வெளிப்பட்டு நிற்கும் யாவற்றுக்கும் மேலான ஒரு தத்துவத்தை "சிவம்" என்கிற புரிதலோடும் அந்த சிவமானது ஆண்மைத்தன்மை யாகிய "சிவன்" (சத்தாகி சலனமற்று நிற்கும் நிர்மலமான அறிவு) என்கிற கடவுட் கோட்பாட்டையும் அநுசரிக்கும் ஒரு மரபாகும். இங்கு சலனமற்ற சத்தாகிய அறிவு ஆண்தன்மையெனில், பெண்மைத் தன்மையாகிய சலனமுள்ள அறிவு "சக்தி" என்கிற சொல்லால் விளிக்கப்படுகிறது. இங்கு சிவம் என்பது அத்துவிதக் கோட்பாடு களின்படி "ஒருபொருள் (uniqueness)" குறிக்கும் தன்மையாயின், சிவன் - சக்தி என்பன துவிதக்கோட்பாடுகளை (இருபொருள் - duality) தழுவி நிற்றலைக்காணலாம். அதேவேளை சிவமாகிய ஒருபொருளே கடவுள் எனும் பெயர்கொண்டு ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. கடவுள் எனும்போது பலருடைய சிந்தையில் ஏதோ உருவத்திருமேனிகள் வந்து போகும். ஆயினும், இங்கு கடவுள் என்பது அவரவர் அறிவுநிலைக்கேற்ப அந்தந்த நிலைகளை எடுக்கக்கூடியது. எனவே தத்துவார்த்த ரீதியாக சித்தாந்த அடிப்படையை விளங்கிக்கொள்தலே சரியானதாகும். இங்கு தத்துவம் (principle) எனப்படுவது "அடிப்படையான உண்மைப் பொருள்" என விளங்கிக்கொள்தல் வேண்டும். அதாவது, வெவ்வேறு பார்வைகளில் வெவ்வேறு வடிவங்களையோ பரிமாணங்களையோ பார்த்து அவைதாம் உண்மை எனத்தவறாக விளங்கிகொள்வதை விடுத்து ஒரு பொருள் பற்றிய உண்மைத் தன்மைய ஏற்றுக்கொள்தல் ஆகும். எடுத்துக்காட்டுக்கு, யானையும் கண்பார்வையற்றவர்களும் என்கிற சிறுவயது தத்துவக்கதையை சொல்லலாம். இங்கு கண்பார்வையற்றவர்கள் என்பதைத்தாண்டி, இருட்டில் உள்ள மனிதர்கள் என்று சொல்வதே சாலப்பொருத்த மானது. இந்தக்கதையின்படி, அந்த இருட்டில் உள்ளமனிதர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவராக ஒரு யானையை தொட்டுப்பார்த்து தங்கள் கருத்துக்களை சொல்கிறார்கள். அதன்படி, யானையின் துதிக்கையை தொட்ட ஒருவர் அது மரம்போன்றதெனவும், வயிற்றைத்தொட்டவர் அது சுவர்போன்றதெனவும், காலைத் தொட்டவர் அது உரல் போன்றதெனவும், வாலைத்தொட்டவர் அது கயிறுபோன்றதெனவும் தங்களுக்கு முன்னமே தெரிந்த பொருட்களின்துணைகொண்டு யானை எப்படி இருந்தது என்பதை வருணிக்க முற்படுகின்றனர். இந்தக்கதையின் தெளிவான கருத்தை உற்று நோக்கில், யானை என்பதுதான் அந்த உண்மைப்பொருள். அதை விவரிக்க முற்படும் இருட்டில் இருக்கும் மாந்தர்கள் அதைத்தங்கள் மொழிகளில் விவரிக்கும் நோக்கில் அதைத்தவறாக சித்தரிப்பதைத்தான் ஒரு உருவகக்கதையாக சொல்லியுள்ளார்கள். மேலும், ஒரு பொருளின் உண்மைத்தன்மையை சொல்வதற்கு அதன் ஒரு பகுதிபற்றிய அறிவு போதாது என்பதே இக்கதையின் இன்னொரு நோக்கம். இதையே இன்னொரு எடுத்துக்காட்டுமூல மாகவும் சொல்லலாம். சாதாரணமான ஒரு கருங்கல் உண்டு. அதில் ஒரு சிற்பி தனது திறமையினால் தேவையற்றபாகங்களை நீக்கி இறுதியில் ஒரு யானை சிற்பத்தை பிறப்பிக்கின்றான். இப்போது ஒரு கேள்வி எழுகின்றது. இந்தயானை அந்தக் கல்லுக்குள் முன்னமே இருந்ததா? இல்லை சிற்பம் எழுந்தபின் தான் வந்ததா? அதேபோல் யானையாகியபின்னர் அந்தக்கல்லு எங்கள் கண்ணுக்கு புலப்படவில்லையே. எனில், யானை வந்தபின் அந்தக்கல்லு மறைந்ததா? இவ்வாறான கதைகள் வெறும் உருவகக் கதைகள் மட்டுமல்ல் அவற்றினூடாக சில மறைபொருட்தத்துவங் களும் சொல்லப்பட்டிருக்கின்றன. அதாவது, உண்மைப் பொருள் என்பது ஒன்றுதான். ஆனால் பார்பவர்களின் கண்களைப்பொறுத்து அவை தோற்றங்கள் மாறுபட்டு நிற்கும்.

இவ்வாறாக, தத்துவங்கள் என்பனவும் அவற்றின் உண்மைத்தன்மை கொண்டு பார்க்கப்படவேண்டும். இதில் சைவசித்தாந்தத்தில் முப்பத்தாறு (36) தத்துவங்கள் சொல்லப்பட்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கின்றன. இந்தத் தத்துவங்கள் இருபத்திநான்கு (24) ஆன்ம தத்துவங்களாகவும், ஏழு (7) வித்தியாதத்துவங்களாகவும், ஐந்து (5) சிவதத்துவங்களாகவும் முப்பெரும் பிரிவுகளாக சொல்லப்பட்டிருக்கின்றன. ஆன்மதத்துவங்கள் இருபத்துநான்கும் ஐம்பூதங்கள், ஐந்து தன்மாத்திரைகள், ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து கன்மேந்திரியங்கள் மற்றும் நான்கு அந்தக்கரணங்களாக விரிந்து நிற்கும். இவை இந்த உடலை எடுத்திருக்கின்ற ஆன்மாவை தொடர்புபடுத்தும் கருவிகளாகும். இதில், ஐம்பூதங்கள் (நிலம், நீர், அக்கினி, வாயு, ஆகாசம்) இந்த உலகில் நாம்காணும் பருப்பொருட்களுக்கு அடிப்படையாக உள்ளன. அவற்றின் தன்மைகள்தான் ஐந்து தன்மாத்திரைகள் (ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை). இந்தத்தன்மாத்திரைகள் அவற்றின் குணவியல்புகளேயாகும்.

**சுவைஒளி ஊறுஓசை நாற்றமென ஐந்தின்**
**வகைதெரிவான் கட்டே உலகு**

**- திருவள்ளுவர்**

அதாவது, ஞானேந்திரியங்களின் அடிப்படையையும் அவற்றின் எல்லைகளின் அறிபவர்கள்தான் இவ்வுலகநியதிகளை அறிந்து அதன்வழி ஒழுகவல்லார்.

இனி, ஞானேந்திரியங்களாவன மெய், வாய், கண், மூக்கு மற்றும் செவி எனும் ஐந்துமாம். அதாவது, ஐம்பூதங்களுக்கு ஐந்துநிலைகளில் தன்மாத்திரைகளுண்டு. அவற்றை அநுபவ பூர்வமாக இந்த உடலாகிய பொறிகொண்டு அறிந்துகொள்வதற்கு இந்த ஞானேந்திரியங்கள் தேவை. இந்த ஞானேந்திரியங்களின் உதவிகொண்டே நாம் இப்பூவுலகில் பருப்பொருட்களின் இருப்பை அறிந்துகொள்கிறோம். கன்மேந்திரியங்களாவன, வாய், கால், கை, எருவாய், கருவாய் எனும் ஐந்துமாம். இவற்றை நாம் எப்படிப்பார்க்க வேண்டுமெனில், ஞானேந்திரியங்கள் வாயிலாக பெற்றுக் கொண்டவற்றை இவ்வுடல் மறுபடியும் எதிர்வினையாற்றுவதை இந்த ஐந்து வகையாக பகுக்கலாம். அதாவது, பேசுதல்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குவரத்து செய்தல், கருமமாற்றுதல், கழிவுப்பொருட்களை வெளியேற்றுதல் மற்றும் புணர்ச்சியின்பத்தில் ஈடுபடல் எனும் ஐந்துமாகும். மேற்சொன்ன இருபது தத்துவங்களும் உடல் எனும் பருப்பொருள் சம்பந்தப்பட்டவை. இவை தவிர்ந்து, மீதித் தத்துவங்களாகிய மனம், புத்தி, சித்தம், ஆங்காரம் எனும் நான்கும் மனம் சம்பந்தப்பட்டவை. மனத்தின் இப்பிரிவுகள் முன்னமே சற்றுவிரிவாக சொல்லப்பட்டுள்ளது. இவ்வாறாக இந்த இருபத்து நான்கு ஆன்மதத்துவங்களும் விளக்கப்பட்டுள்ளது. இவை ஆன்மா கொண்டுள்ள உடல், மனத்தை சார்ந்து நிற்கும்.

அடுத்து, வித்தியாதத்துவங்கள் மாயை, காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன் எனும் ஏழுமாகும். மேலே சொன்ன ஆன்மதத்துவங்கள் மட்டுமே ஒரு ஆன்மா தன் உடல், மற்றும் மனம் கொண்டு இவ்வுலகியல் வாழ்க்கையில் கருமமாற்றப் போதுமற்றது. ஐம்பொறிகளால் நுகரப்படும் அநுபவங்கள் உடலின் உள்ளே சென்று சிலதூண்டல்களை ஏற்படுத்தவேண்டும். அந்தத்தூண்டல்கள் பருப்பொருளிலிருந்து தூலப்பொருளாகிய மனத்தால் அறியப்பட்டாலும், அதற்கான எதிர்வினைகளை ஆற்றுவதற்கு போதுமானதாகா. எனவே அந்த தூலப்பொருட்கள் வேறுபல பரிணாமங்களை நம்கண்களுக்குப்புலப்படாத சக்தி மாற்றங்களுக்குட்படுத்தப்படவேண்டும். அதில் ஒன்றுதான் ஒரு பொருள் மீதான இச்சை. இவ்விச்சைக்கு உருவம் கிடையாது. எடுத்துக்காட்டாக, ஒரு சிறுகுழந்தைக்கு விளையாட்டுப்பொருட் களைக் காண்பிக்கின்றோம். அதைத்தன் புலன்வழி அநுபவித்த (பார்த்த) குழந்தையொன்று இருவகையான எதிர்வினைகளை ஆற்றலாம். ஒன்று, அதை நாடி பின்னால் வருவது, மற்றொன்று அதை புறந்தள்ளுவது. உண்மையில் நம் உடலின் உள்ளே நடக்கும் மாற்றங்கள்தான் வித்தியாதத்துவத்தின் அடிப்படை. இங்கு அக்குழந்தைக்கு வரும் விருப்பு மற்றும் வெறுப்புகளை தீர்மானிப் பதற்கு வித்தியாதத்துவங்கள் ஏழும் துணை நிற்கின்றன. இவ்வேழு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாதத்துவங்களும் அசுத்தாமாயையிலிருந்து தோற்றுவன. அசுத்தாமாயையில் ஒரு சிறுபிரிவே முதலாவது வித்தியாதத்துவ மாகிய மாயை. அது தனது ஆற்றலால் ஒன்றாகவும் பலவாகவும் விரிந்து நிற்கும். இதை விளங்கிக்கொள்வதற்கு இப்பூமியில் உள்ள மண்ணை எடுத்துக்கொள்ளலாம். இந்தமண் புவியின் மேற்பரப்பில் இருக்கும்போது மண்ணாகவே இருக்கிறது. அதில் ஒரு பகுதியை பிரித்து நீரோடு சேர்க்கின்றோம். அது மட்களியாகின்றது. அந்தக்களிகொண்டு பின்னர் பாண்டம் செய்கின்றோம். இங்கு முன்னர் மண்ணாக அழைக்கப்பட்ட ஒரு பொருள் பின்னர் உருவமாற்றத்தால் சட்டி என்றும், பானை என்றும் தன் உருவ அமைப்பைப்பொறுத்து வெவ்வேறு பெயர்கள் கொண்டு விளிக்கப்படுகின்றது. இதுதான் மாயையின் செயற்பாடு. தன் ஆற்றலால் அது விரிந்துகொண்டே செல்லும். அடுத்து வரும் வித்தியா தத்துவம் காலம். தற்போது நாம் நேரம் எனும் சொற்பிரயோகத்தை பயன்படுத்துகின்றோம். காலம் என்பதை இலகுவில் விவரித்து விடமுடியாது. இருவேறு பரிணாமங்களுக் கிடையில் வேறுபாட்டைக்காண்பிக்க காலம் நமக்கு உதவு மாயினும், காலத்தை எடைபோட முடியாது. ஏனெனில் காலம் என்பது சாதாரண மனிதருக்கு வெறும் அலகு மட்டுமே. காலத்தையும் அலகையும் பொதுவாகவே நாம் ஒன்றெனத் தவறாக விளங்கிக்கொண்டு இருக்கிறோம். நொடி, மணி, நாழிகை என்பன காலத்தை அளவிடும் மனிதனின் அலகுகளேயன்றி அவை காலம் அல்ல. இவ்வலகுகள் காலத்தை அளவிடுவதற்கு மனிதனால் உருவாக்கப்பட்ட சார்பு அளவுகள் (relative measurements) மட்டுமே. காலமானது, ஒரு குறிப்பிட்ட நியதிக்கூடாக பயணிக்கும்போதே அதனை நாம் தெளிவாக புரிந்துகொள்ள முடியும்.

மூன்றாவது வித்தியாதத்துவமாகிய நியதி என்பது, ஒன்றின் எல்லைகளை வரையறுக்கவல்ல ஒரு ஆற்றல். எடுத்துக்காட்டுக்கு, ஒரு பிறந்த குழந்தையை கொண்டால், அக்குழந்தைக்கு பொதுவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை மாதங்களில் பற்கள் முளைக்கும் என்பது நியதி. அப்பிள்ளை எப்போது பருவம் எய்தமுடியும் என்பது நியதி. அதன்பின் எப்போது மூப்பு அடையவேண்டும் என்பது நியதி. அதன்பின் எப்போது இறக்கவேண்டும் என்பதுகூட நியதியே. இவ்வாறாக நியதிகளின் கீழ்க்கட்டுப்பட்டு ஒழுகும்போது காலம் என்பது கூடவே பயணிக்கும். இதன்பின் நான்காம் வித்தியா தத்துவமாகிய கலை தேவைப்படுகின்றது. கலித்தல் என்கிற சொல்லில் இருந்தே கலை என்பது வந்ததாக சொல்லப்படும். கலித்தல் என்பதற்கு செலுத்துதல் எனும் பொருள் உண்டு. பூவுலகின் புறத்தே நிகழ்பவற்றை நாம் இந்திரியங்களின் வாயிலாக அறிகின்றோம். இவ்வறியும் ஆற்றல் ஞானாசக்தி என விளிக்கப்படும். ஞானாசக்தியினின்று விளைகின்ற ஆற்றல் இச்சாசக்தி ஆக கொள்ளப்படுகின்றது. இவ்வாற்றல் மூலமாகவே நம் உடலினுள் இச்சை என்கிற செயல் உருவாகின்றது. இந்த இச்சைதான் புறக்காரணிகளில் நமக்குண்டான நாட்டத்தை (ஈர்ப்பு) தருகின்றது. நாட்டம் உருவாகும்போது அதன் விளைவாக ஒரு ஆன்மா அதற்கு எதிர்வினை ஆற்றத்தலைப்படுகின்றது. இவ்வெதிர்வினையே கிரியாசக்தி என விளிக்கப்படுகின்றது. இன்றைய விஞ்ஞானத்தின் விளங்கமுடியாத்தத்துவங்களே இவை. மேலும் ஆன்மாவின் அறிவு ஒன்றே தன்நிலை வேறுபாட்டின்மூலம் அறிதல், விழைதல், மற்றும் செய்தல் (எதிர்வினையாற்றல்) எனும் மூன்றுமாக உள்ளது என்பதை தெளிந்துவைத்திருத்தல் அவசியம். இவைமூன்றும் வெவ்வேறல்ல. உலகில் பிறக்கும் மாந்தர்கள் யாவர்க்கும் பொதுவான ஒன்றே உலகியல் நாட்டம். அதில் இந்த நாட்டமும் நோக்கமுமில்லையெனில் நமக்குப்புறத்தே இருக்கும் யாவற்றினதும் காரணமும் தேவையும் அற்றுப்போகின்றது. எனவே, இவ்வகையான நாட்டத்தைத்தரவல்ல கிரியாசக்தியை உந்து விக்கும் வித்தியாதத்துவமே கலை. கலையாகிய தத்துவத்தைத் தொடர்ந்து வித்தை மற்றும் அராகம் எனும் தத்துவங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுகின்றன. இங்கு வித்தையானது, ஞானாசக்தியை தூண்டும் ஒரு தொழிலையும் அராகம் (விருப்பம்) ஆன்மாவின் இச்சா சக்தியை தூண்டும் செயலையும் செய்கின்றன. இவ்வாறே நாம் பௌதீக பொருட்களை நுகர்கிறோம். இவ்வாறு நுகரும் நுகர்ச்சிகளை மறுபடியும் இங்கு நியதி எனும் தத்துவம்,வெளிப்பட்டு நுகர்ச்சிகளின் எல்லைகளை நிர்ணயிக்கின்றது. இதன்போதே நமக்கு திருப்தி எனும் எல்லை கிட்டுகின்றது. இல்லையேல் அந்த நுகர்ச்சிகளுக்கு எல்லையற்றுப்போகும். அதுபோல், காலம் என்கிறதத்துவமும் சேர்ந்து எதுவரை இவ்வாறான நுகர்ச்சிகள் இருக்கவேண்டும் என்கிற வரையறைகளை செய்யும். ஈற்றில், புருடன் என்கிற மொத்தத்தத்துவமானது கிரியா சக்தி, இச்சா சக்தி, ஞானாசக்தி, நியதி, மற்றும் காலம் என்கிற ஆன்மாவோடு என்றும் ஒட்டியிருக்கும் சட்டைகளையும் கொண்டிருக்கும். இவ்வைந்தும் "பஞ்சகஞ்சுகம்" எனப்படும் ஆன்மாவுடன் ஒட்டிநிற்கும் தத்துவங்களாகும்.

**தேசனைத் தேச மாகுந் திருமாலோர் பங்கன் றன்னைப்**
**பூசனைப் புனிதன் றன்னைப் புணரும்புண் டரிகத் தானை**
**நேசனை நெருப்பன் றன்னை நிவஞ்சகத் தகன்ற செம்மை**
**ஈசனை யறிய மாட்டே னென்செய்வான் றோன்றி னேனே**

**- அப்பர்**

இங்கு வஞ்சகம் என்பது பஞ்சகத்தினின்று வந்த திரிபெனக் கொள்தல் வேண்டும். நிவஞ்சகமாவது (நிபஞ்சகம்), பஞ்ச கஞ்சுகத்தை நீங்கிய நிலையை சுட்டி நிற்கின்றது. நிவஞ்சகம் எனப்படிக்கையில் அகன்ற செம்மையான ஈசன் எனக்கொள்தல் வேண்டும். இங்கு, வஞ்சகத்(து)அகன்ற எனப்பொருள் பிரித்துப்படிப் போருமுண்டு. அப்பர் சுவாமிகள் சிவனை அறிந்துகொள்ளமுடியாத தன் சிற்றறிவை நொந்து பாடிய இத்தேவாரம் அவரின் சித்தாந்த விளக்கநிலையை தெளிவுபடுத்திச் சொல்கிறது.

மேற்சொன்ன அசுத்தாமாயை தத்துவங்களாகிய வித்தியா தத்துவங்கள் ஏழும் இறைநிலையாகிய தூய ஆற்றலோடு பொருந்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்காதென்பதால் அதற்குரிய ஆதாரநிலை ஒன்று தேவைப்படுகிறது. அதுவே சுத்தமாயை தத்துவங்களால் விளக்கப்படுகின்றது. இதனை விளங்கிக்கொள்வதற்கு நிறக்கண்ணாடியொன்றை எடுத்துக்காட்டாக கொள்ளலாம். ஒரு ஒளிவிளக்கு உள்ளது. அந்த ஒளிவிளக்குக்கு நிறம் இல்லை. வெறும் ஒளியை மட்டும் இருளினூடே பாய்ச்சி அதுதானாக ஒளிர்கின்றது. இப்போது அந்த ஒளிவிளக்கை மூடி ஒரு சிவப்பு நிறக்கண்ணாடியை வைக்கும்போது முதலில் தெரிந்த வெளிச்சம் இப்போது சிவப்பு நிறமாகத் தெரிகின்றது. கவனிக்கவேண்டிய விடயம் எதுவெனில், ஒளி விளக்கின் பிரகாசத்துக்கு எவ்வித களங்கமும் ஏற்படவில்லை. சூழவிருக்கும் சிவப்பு நிறக்கண்ணாடி தன்னூடாக அந்த வெளிச்சத்தை சிவப்பாக காட்டுகின்றது. அதாவது, தூய ஒளிவிளக்கு தனது ஒளியின் நிறத்தை சிவப்பாக மாற்ற உதவியது நிறக்கண்ணாடிதான். இச்செயலுக்கு ஆதாரமாகிய நிலைக்களன் தான் அந்த நிறக்கண்ணாடி. இங்கு நிறக்கண்ணாடியின் தொழிற்பாடு வேறெதுவுமன்று. சுத்தசக்தியாகிய சிவ ஆற்றல் தன்னை ஆன்மாவினோடு தொடர்புபடுத்தி இவ்வுலகில் ஆற்ற விருக்கும் கருமங்களுக்கு நிறக்கண்ணாடி என்கின்ற சுத்த மாயையை கருவியாகப்பயன்படுத்துகின்றது. இவ்வாறாக, சிவ ஆற்றலானது தன்னை சுத்தமாயையில் பொருத்தி ஐந்து தத்துவங்களை தோற்றுவிக்கும். அவைதாம் நாதம், விந்து, சதாசிவம், ஈசுரம் மற்றும் சுத்தவித்தை எனும் ஐந்துமாம். நாதம் என்பது சிவமாகவும், விந்து என்பது சக்தியாகவும் கொள்ளப்படும். சதாசிவம் என்பது சாதாக்கியம் எனவும் சொல்லப்படும். இங்கு சுத்தாமாயைக்கும் (ஐந்து) அசுத்தாமாயைக்கும் (ஏழு) இருக்கின்ற வேறுபாட்டை நன்றாக விளங்கிக்கொள்தல் அவசியம். இரண்டுமே மாயை என்கிற ஒரே சொல்லின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ளன. ஆயினும் இரண்டுக்கும் வித்தியாசங்கள் உண்டு. சுத்தாமாயை தூய இறைநிலையோடு (சிவம்-தூய்மையானது) பொருந்தி நிற்கின்றது. அசுத்தா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயை ஆன்மாவாகிய (மலம்-தூய்மையற்றது) பொருந்தி நிற்கின்றது. அசுத்தாமாயையின் பொதுவான ஆற்றல் "பரிணமிப்பது". அதாவது, ஒன்று இன்னொன்றைப்போல் வெளிப்படுவது. அல்லது, ஒன்றன்மேல் இன்னொன்றை ஏற்றிக்காட்டுவது. இதற்கு இலகுவான எடுத்துக்காட்டு மண்ணாலான குடம் ஆகும். இங்கு ஒரு பொருள் குடமாவதற்குமுன் மண்ணாக சொல்லப்படுகின்றது. அதுவே உருமாறியபின் மண்ணென்று அழைக்கப்படுதற்கு பதிலாக குடம் என்று அழைக்கப்படுகின்றது. இது அசுத்தாமாயையின் பரிணமிக்கும் செயல். மாறாக, சுத்தாமாயையின் செயல் அவ்வாறானதன்று. அது விரிவடையக்கூடியது. இங்கும் இறைநிலையின் ஞானாசக்தி, கிரியாசக்தி என்பன தொடர்புபட்டு நிற்கும். இறைவனின் தூயநிலைகாரணமாக, இங்கு இச்சாசக்தி தொழிற்படாது. அதன்படி, இறைவனின் ஞானாசக்தியின் ஆற்றலால் சுத்தமாயையின் ஒருபகுதி விரிவுறத்தக்கதென அறியப்படும். இதுவே நாதம். இவ்வாறு அறியப்பட்ட பகுதியானது, விரிவடைந்து அவனது கிரியாசக்தி தத்துவமாகி விரிவடையும். இது விந்து எனவிளிக்கப்படும். இந்த நாதமும்-விந்தும் சேர்ந்து மேலும் விரிவடைந்து சதாசிவம் என்கிற சாதாக்கிய தத்துவமாகி நிற்கும். இறைவனின் ஞானாசக்தி மற்றும் கிரியாசக்தி சமவளவில் தொழிற்படும் நிலையே இது. அதற்கு அடுத்தநிலையில் இறைநிலையின் கிரியாசக்தி வலுத்தும், ஞானாசக்தி குறைந்து காணப்படும் ஈசுரதத்துவமாக விரிவடைகின்றது. இறுதியில் சுத்தவித்தை எனும் படிமுறையில், ஈசுரதத்துவத்தில் கிரியாசக்தி வலுத்து நின்ற இறைநிலை, ஞானாசக்தி வலுத்து நிற்கும் நிலையை எடுக்கும். இங்கு, சுத்தவித்தை எனப்படுவது, ஆன்மாவில் வெளிப்படும் வித்தையல்ல. அது அசுத்தாமாயை தத்துவத்தில் கொள்ளப்படும். இறைநிலையின் வித்தையை வேறுபடுத்திக் காட்டுவதற்காக சுத்தவித்தை எனும் பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மேற்சொன்ன ஐந்து தத்துவங்களுமே (நாதம், விந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதாசிவம், ஈசுரம், மற்றும் சுத்தவித்தை) இறைநிலையின் சிவதத்துவங்களாகும். மொத்தத்தில் இப்பூவுலகின் தொழிற்பாட்டை விளக்கிச்சொல்வதற்கு இந்த முப்பத்தாறு தத்துவங்களுமே அவசியமாகின்றது. இவைதாம் சைவசித்தாந்தத்தின் அடிநாதம். இத்தத்துவ விளக்கங்களை புரிந்துகொண்டாலன்றி, சித்தாந்த உட்கட்டமைப்பை விளங்கிக்கொள்தல் அசாத்தியமே.

## சைவசித்தாந்தம் - முப்பொருள் விளக்கம்

முன்னைய தலைப்பில் விளங்க முற்பட்ட தத்துவங்களினின்றும், ஒன்று தெளிவாகப்புலப்படும். அதாவது சைவசித்தாந்தத்தில் இறைநிலை என்கிற நம் ஆற்றலுக்கு மேலான ஒன்று, ஆன்மா என்கிற நம்முடல் சார்ந்த ஒன்றை தொடர்புபடுத்தி நிற்கின்றது. இவையிரண்டையும் தொடுக்கும் கருவியாக (இடைநிலை ஆற்றல்) இன்னொன்று நிற்கின்றது. இவை மூன்றுமே சைவசித்தாந்தத்தில் பதி-பசு-பாசம் என்கிற சொற்பதங்களினூடாக விளக்கப்படுகின்றன. இங்கு பதி என்பது இறைதத்துவங்களையும், பசு என்பது ஆன்மதத்துவங்களையும் தாங்கி நிற்றலை விளங்கமுடிகின்றது. பாசம் என்பது இரண்டையும் தொடர்புபட்ட மூன்றாவது நிலை. பதியாகிய இறைதத்துவத்தை மேலும் மூன்றாக வகுத்துக்கொள்ளமுடியும். அருவம், உருவம், அருவுருவம் என்கிற மூன்று திருமேனிகளாக அவை கொள்ளப்படும். பருப்பொருளல்லாத நாதம்-விந்து என்பன அருவத்திருமேனிகளின் அடக்கம். பருப்பொருட்களின் இயக்கத்துக்கு பிரம்மா, விட்டுணு, உருத்திரன் எனும் உருவத்திருமேனிகள் தொடர்புற்று நிற்கின்றன. சிவலிங்கம் அருவுருவத்திருமேனித்தத்துவத்தின் வெளிப்பாடாகி நிற்கின்றது.

அடுத்து, பசுவாகிய ஆன்மாவின் நிலைகளை மூன்றாக வகுக்கலாம். ஆன்மாவானது, பாசம் என்கிற மலத்தை தாங்கி நிற்பது. மலங்கள் ஆணவம், கன்மம், மாயை எனும் மூன்றாக பகுக்கப்படும். இதில் ஆணவம் மட்டுமே கொண்ட ஒருமலத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்தோர் விஞ்ஞானகலர் எனவும், ஆணவம், கன்மம் எனும் இருமலத்தை சார்ந்தோர் பிரளயாகலர் எனவும், மூன்று மலங்களையும் கொண்டோர் சகலர் எனவும் விளிக்கப்படுவர். மேலும், இந்த ஆன்மாக்கள் வெவ்வேறு நிலைகளை கொள்ளவல்லது. இந்நிலைகளை அவத்தைகள் (phases) எனவும் கூறுவர். அவை நனவு/விழிப்பு (சாக்கிரம்), கனவு (சொப்பனம்), உறக்கம் (சுழுத்தி), ஆழுறக்கம் (துரியம்), உயிர்ப்படக்கம் (துரியாதீதம்) என்பனவாம். அதற்கு நேரொத்தாற்போல், ஆன்மாவானது தனது அறிவுநிலைக்கேற்ப ஐந்து உடல்களை எடுக்கும். அவற்றை பஞ்சகோசம் (ஐந்து உடல்கள்) என்பர். அவையாவன, அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம் மற்றும் ஆனந்தமயம்.

**பிறிவிலா ஞானத் தோரும் பிறப்பற அருளா லாங்கே**
**குறியொடும் அஞ்ச வத்தை கூடுவர் வீடு கூட**
**- அருணந்திசிவம்**

இதில், விழிப்பு நிலையில் ஆன்மாவானது தான் இந்த உடலுக்குள் அடங்கிய ஒரு பொருள் என்கிற உணர்வை எடுக்கும். இந்நிலையில் முன்னர் விளங்கிக்கொண்ட முப்பத்தாறு தத்துவங்களும் தொழிற்படு நிலையிலிருக்கும். இதற்காக ஆன்மா தனது அன்னமயகோசத்தை எடுக்கும். அன்னமயகோசமென்பது உணவால் பெருக்கிக்கொண்ட உடல் என்பதாகும். நவீன் விஞ்ஞானம் இந்நிலையில் மூளையின் அலைவடிவத்தை Alpha (approx. 8-14 Hz) மற்றும் Beta (approx. 14-30 Hz) என்கிற குறியீட்டு வடிவங்களில் இனங்கண்டுள்ளது. கனவு நிலையில், உடல் அடங்கி மனம் மட்டும் விழித்த நிலையில் மனதையே தன் உணர்வுகளின் இருப்பிடமாக கொள்ளும். இந்நிலையில் ஆன்மாவுக்கு ஞானேந்திரியங்களும், கன்மேந்திரியங்களும் தொழிற்படாது. தான் விரும்பும் ஒன்றை நுகர்வதற்கு பருவுடல் தேவைப்படாது. தன்மனம் கொண்டே தனது விருப்பு வெறுப்புகளை ஆன்மா தீர்த்துக்கொள்ளும். இதனால் அந்தக்கரணங்கள் நான்கும் (மனம், புத்தி, சித்தம், ஆங்காரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னமும் அவற்றின் தொழிற்பாட்டில் இருக்கும். இந்நிலையில் ஆன்மா கொள்ளும் உடலை பிராணமயகோசம் என்பர். அதாவது ஆன்மாவானது தனது பிராணனின் (வாயுக்கள்) மூலம் வளர்த்த உடலை ஏற்றுநிற்கும். இது, இன்றைய விஞ்ஞானம் சொல்லும் பிராணவாயு (oxygen) மட்டுமல்ல. பிராணமய கோசம் என்பது, தசவாயுக்கள் எனப்படுகின்ற பிராணன் (மேலெழும் வாயு), அபானன் (கீழ்நோக்கி செல்லும் வாயு), உதானன் (உதரப்பகுதியில் தொழிற்பட்டு சமிபாட்டை செய்வது), சமானன் (உடலின் சமநிலையினை பேணுவது), வியானன் (உடலின் வெவ்வேறு பாகங்களில் வியாபித்து நின்று அழுத்தத்தை சமநிலையில் வைத்திருப்பது) என்கிற ஐந்து மூலவாயுக்களையும் நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், மற்றும் தனஞ்சயன் என்கின்ற உபவாயுக்களையும் உள்ளடக்கிய தேகம் ஆகும். இதிலே, தனஞ்சயன் எனும் வாயுவே மனித உடலினின்றும் வெளியேறும் கடைசி வாயுவாகும். இவ்வாயு நீங்காதவரையில் தேகம் சிதிலமடையாது. இதைப்பயன்படுத்தியே சித்தர்கள் தம்முடல்களை சமாதிநிலையில் நீடித்து வைத்திருந்தனர் என்பதை பற்பல ஆய்வுகளின்மூலம் கண்டறிந்துள்ளனர். நவீன விஞ்ஞானத்தின்படி இது மனிதமூளை வெளிவிடும் அலைகளின் theta (approx. 4-8 Hz) நிலையாகும்.

இதற்கடுத்த நிலையாகிய உறக்கநிலையில் உடல் அடங்கியிருக்கும், பிராணன் என்கிற வாயுக்களும், மனத்தின் நான்கு கூறுகளில் ஒன்றாகிய சித்தமும், புருடன் என்கிற தத்துவநிலைகளும் விழிப்புநிலையில் இருக்கும், ஆனால் ஆங்காரம் (தன்முனைப்பு வெளிப்படாது). மேலும், சித்தம் தன்பதிவுகளை ஆன்மாவுக்கு சூசகமாகத்தெரிவிக்கும். இப் பதிவுகள் ஆணித்தரமாக அமையுமிடத்து ஒருவரின் காரியங்கள் தெளிவானவையாக அமையும். இதையே தற்கால விஞ்ஞானம் ஆழ்மனம் (sub-conscious mind) எனக்குறிப்பிடுகின்றது. இந்நிலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் ஆன்மாவானது மனோமயகோசத்தை உடலாகக்கொள்ளும். மேலும் இது, மூளையின் அலைவடிவத்தில் delta (approx. 0.1 – 4 Hz) என்கிற குறியீட்டு வடிவம் தாங்கி நிற்கின்றது. நான்காம் நிலை துரியம் எனப்படுவது உடல், மற்றும் மனம் என்பவற்றை முழுமையாக விடுத்து நிற்கும். இங்கு சித்தமும் அடங்கிவிடும். இந்நிலையில் ஆன்மாவானது, தனது விருப்பு-வெறுப்புகளற்ற நிலையை "சாட்சியாக (witness)" காணும். இதற்கு பதிவுகள் கிடையாது. அதாவது, இந்த நிலையை நமது மூளைபதிவுசெய்து மறுபடியும் நாம் விழிப்பு நிலைக்கு திரும்பியபின்னர் அந்த அநுபவத்தை வெளிப்படுத்தக்கூடிய ஆற்றல் இருக்காது. ஏனெனில் ஆன்மா இந்நிலையை வெறும் சாட்சியாக கண்டது. அதற்கு பதிவுகள் மனத்தில் இல்லாமையால் அதன் பெருமைகளை ஆன்மாவால் வெறும் வார்த்தைகளால் சொல்லமுடியாது. "என்னை மறந்து உறங்கினேன்" என்கிற வெற்று வார்த்தைகளே அநுபவமாக வெளிப்படும். இந்நிலையையும் இதற்கடுத்த துரியாதீதநிலை யையும் விஞ்ஞானம் எவ்வாறு அளவிடுகின்றது என்பதற்கு போதிய ஆதாரபூர்வ விளக்கங்கள் கொடுக்கப்படவில்லை.

இறுதியாக, உயிர்ப்படக்கம் என்கிற துரியாதீதநிலையில் ஆன்மாவானது இந்த அண்டவெளியாவையும் வியாபித்து நிற்கின்ற நிலையை கொள்ளும். இந்நிலையிலும் உடலுள் உயிர் அடங்கியிருக்கும் ஆனால் புறக்காரணிகள் ஆன்மாவை எதுவும் செய்யா.

மேலும் இங்கு சொல்லப்பட்ட அவத்தைகளில் விழிப்பு நிலை இருதயத்திலும், கனவு நிலை கண்டத்திலும், உறக்கநிலை அடிநாவிலும், துரியம் புருவமத்தியிலும், கடைசியக துரியாதீதம் உடலுக்கு வெளியேயும் நுகரப்படுமெனக் கூறுவர். இதனை உபாயநிட்டை அல்லது சமாதி என்பர். உடலுக்கு வெளியே நுகரப்படுவனவற்றை (Out-of-body experience) விவரிக்கமுடியாது, ஏனெனில் இவ்வவத்தையில் மனம் என்கிற கருவிக்கு தேவைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. மனம் தன்னுள் பதிவு செய்தவற்றை மாத்திரமே வெளிப்படுத்தமுடியுமாதலால் துரியாதீதம் என்பது சொற்களால் விவரிக்கவியலாத ஒன்றாக மட்டுமே இருக்கமுடியும்.

இனி, பாசம் என்கிற மலத்தை கொண்டால், அதுவும் மூன்று பெரும்பிரிவுகளாக விவரிக்கப்படுகின்றது. ஆணவம், கன்மம், மாயை எனும் பிரிவுகளாக அறியவல்ல மும்மலங்கள் அதிகளவில் ஆன்மாவை அண்டி நிற்கும். ஆணவமலமே இதில் ஆன்மாவின் அறிவுநிலையை மழுங்கடித்து முழுவதுமாக போர்த்து நிற்கும். இதனால், ஆன்மாவானது உண்மை எது, பொய் எது என்று அறியாது தவித்து நிற்கும். அந்தநிலைமயக்கத்திலேயே இவ்வுடல் கொண்டு ஆன்மாவானது கருமங்களை ஆற்றும். கன்மம் என்பது நாம் செய்யும் வினைகளின் தொகுப்பாகும். அடிப்படையில் இவை நல்வினை மற்றும் தீவினை என்று கொள்ளப்பட்டாலும், அந்தந்த ஆன்மாக்களின் பழவினைகளுக்கு (சஞ்சிதம்) ஏற்பவும், இப்பிறவியில் சேர்த்துக்கொண்ட வினைகளுக்கு (பிராரத்தம்) ஏற்பவும், இவ்வாறான வினைகளை அநுபவிக்கும்போது சேர்த்த வினைகளுக்கு (ஆகாமியம்) ஏற்பவும் மூவகை வினைகளாக கருதுவர் சித்தாந்திகள். மாயை என்பது மிகவும் வலிமையான ஒரு ஆற்றல். அது சுத்தமாயை, அசுத்தமாயை, மூலப்பகுதி (என்கின்ற பிரகிருதிமாயை) மூன்றுபிரிவுகளாக கொள்ளப்படும். இங்கு பிரகிருதி மாயை அசுத்தமாயையின் ஒர் அங்கமாகும். அது மேலும் தனு, கரணம், புவனம், போகம் எனும் பிரிவுகளாக பரிணமிக்கும். இங்கு தனு என்பது பஞ்சபூதங்களையும் அவற்றின் காரியங்களையும் உள்ளடக்கிய பூததேகம்.

**"..... மாயா இயந்திரத் தனுவினுள் ஆன்மா"**

**- மெய்கண்டதேவர்**

கரணம் என்பது மனம், புத்தி, சித்தம் மற்றும் ஆங்காரம் எனும் அந்தக்கரணங்களை குறித்து நிற்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்தக்கரணம் அவற்றினொன் றன்றவை சந்தித்த..."

- மெய்கண்டதேவர்

புவனம் என்பது கன்மமாகிய வினைகளை நுகர்வதற்கு ஏதுவான இடம். மேலும், போகம் என்பது அவ்நுகர்ச்சிப்பொருட்கள். சுத்தமாயையானது ஐந்து (5) சிவதத்துவங்களாகவும் அசுத்தமாயை யானது ஆன்மாவில் ஏழு (7) தத்துவங்களாகவும் முன்னமே விளக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக, பதி-பசு-பாசம் என்கின்ற முப்பொருட்கள் சைவசித்தாந்தத்தின் அடிப்படையாக சொல்லப்பட்டிருக்கின்றது.

விரதம் என்பது நாங்கள் சில நாட்களிற்கு சிலவேளை உணவைத் தவிர்த்து அவற்றைச் சேமித்து வைத்து விரதம் முடிந்த பின்னால் அவற்றை உணவுக்குப் பயன்படுத்துவது விரதமாகாது. நாம் விரதகாலத்தில் எத்தனை வேளை உணவைத் தவிர்த்தோமோ அத்தனை வேளை உணவையும் பிறருக்கோ பிறதினிற்கோ கொடுக்க வேண்டும் எமக்கான ஒன்றினை நாம் பிறருக்கோ பிறதினிற்கோ கொடுப்பதே தியாகமாகும் தியாகத்தின் பின்னணியிலே வருவதே விரதமாகும். அத்தோடு விரத காலத்திலே இறைசிந்தனை மனிதிலே நிரம்பியிருக்கவேண்டும். கவலை மனதிலே நிரம்பியிருந்தால் பசி ஏற்படுவதில்லை கோவம் மனிதிலே நிரம்பிருந்தால் பசி ஏற்படுவதில்லை மகிழ்ச்சி மனிதிலே நிரம்பி யிருந்தால் பசி ஏற்படுவதில்லை அதேபோலவே பக்தியும் இறை சிந்தனையும் மனதிலே நிரம்பியிருந்தால் பசி ஏற்படுவதில்லை.அதுவே விரதமும் விரதத்தின் மூலம் கிடைப்பதை மற்றவர்களுக்கோ மற்றவைகளுக்கோ கொடுபதுமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவஞானபோதம்
# ஒரு ஆரம்பநிலை விளக்கம்

சிவஞானபோதம் என்கிற அத்துவித (Non-dual) தத்துவ நூல் தன்னுள்ளேயே துவித (duality) கொள்கைகளை ஏற்று அதனூடு இறைவனின் ஒருமையை விளக்கிநிற்கும் அரியநூலாகும். இதை இயற்றியவர் திருவெண்ணெய்நல்லூர் எனும் ஊரைச்சேர்ந்த மெய்கண்டதேவர் ஆவார். சைவசித்தாந்தத்தின் தொடக்கநூல் களான திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் என்பவற்றுக்கடுத்த படியாக கி.பி 13ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட தேவையின் நிமித்தம் சிவஞானபோதம் என்கிற மிகக்குறுகிய வடிவான சூத்திரநூல் (fomula-based) வருகின்றது. இதன் சிறப்பு யாதெனில் முப்பொருட்களாகிய பதி-பசு-பாசம் என்பவற்றை ஆய்ந்தறிந்து ஏதுக்கள்துணைக்கொண்டு நிறுவப்பெற்றிருத்தலாகும். வெறும் பன்னிரண்டே சூத்திரங்களில், நாற்பது அடிகளில் மொத்த சித்தாந்த தத்துவங்களையும் அடக்கியுள்ள இந்நூலை விவரிக்க பின்னாளில் சிவஞானசித்தியார் என்கின்ற வழிநூல் அவரது மாணவராகிய அருணந்திசிவாசாரியாரால் இயற்றப்பட்டது. இப்பன்னிரண்டு சூத்திரங்களில் முதல் ஆறும் "திருக்கு-திருசிய விவேகவியல்" என்றும் பின் ஆறும் "சாதன-சாத்திய விவேகவியல்" என்றும் பிரிக்கப்பட்டுள்ளது. திருக்கு என்பது அறிவு, திருசியம் என்பது அறிவால் உணரப்படும் பொருள். சாதனம் என்பது கருவி, சாத்தியம் என்பது கருவிகளின் துணைகொண்டு பெறப்படுவது.

<u>மங்கலவாழ்த்து</u>

கல்லால் நிழல்மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லால் - கல் + ஆல்; மலைவில்லார் - மலைவு + இல்லார் மலைவு - மயக்கம்; பொல்லார் - பொல்லாப்பிள்ளையார்; புனைவர் - சூடுதல் / வணங்குதல்

கல்லால மரநிழலில் அமர்ந்திருக்கும் மயக்கம் இல்லாத வராகிய சிவனார் தந்தருளிய பொல்லாப்பிள்ளையாரின் சேர்ந்த பாதங்களை நல்லவர்களாகிய மெய்யன்பர்கள் வணங்கித்தொழுது நிற்பரே.

## திருக்கு-திருசிய விவேகவியல்

**சூத்திரம் I:**

அவன் அவள் அது எனும் அவைமூ வினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கிமலத் துளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்

மூவினை - முத்தொழில்கள் (தோற்றம், இருப்பு, மறைவு);திதி - நிலை

ஆணவம் என்கின்ற மலத்தின் காரணமாக அவன், அவள் மற்றும் அது என்று நாம் விளிக்கும் அனைத்தும் முத்தொழில் களாகிய ஆக்கம், இருப்பு, அழிவு என்பவற்றுக்கு உட்படுவத னாலும், இந்தப்பிரபஞ்சத்தை தோற்றுவித்த நிலையே மறுபடியும் ஒடுங்குதலாலும் இவற்றை ஆற்றுவதற்குரிய ஆற்றல் வேறாக உண்டென்பதை ஊகித்து அறிதல். இங்கு ஊகம் என்பது வெறுமனே ஊகமல்ல. மாறாக அநுபவபூர்வமான நிறுவுதலே யாகும். எடுத்துக்காட்டுக்கு, ஓரிடத்தில் மணமுடன் கூடிய புகை வருகின்ற தெனில் அவ்விடத்தில் நெருப்பு உண்டென்பதை ஊகித்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சூத்திரம் 2:**

அவையே தானே யாயிரு வினையின்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே

இருவினை - ஆக்கம், அழிவு

மேற்கூறிய அவை (உயிர், மற்றும் சடப்பொருட்கள்) அனைத்தும் தானேயாய் விளங்கும் அவ்விறைநிலை, தனது நியதியின் காரணமாக வருகின்ற இருவினைகளுக்கு ஏற்ப ஒரு உயிரின் போக்குக்கும் வரத்துக்கும் காரணமாகி அதனின்றும் நீங்காது வேறற்று நிற்கும்.

**சூத்திரம் - 3**

உளதில தென்றலின் எனதுடல் என்றலின்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் கண்படில்
உண்டிவினை இன்மையின் உணர்த்த உணர்தலின்
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா

கண்படுதல் - உறக்கம்; உண்டிவினை - உண்தல்; இயந்திரதனு - பொறிகளால் இயங்கும் உடம்பு

உள்ளது-இல்லது என்று வாதப்பிரதிவாதங்களுக்குட்பட்டமையாலும், "எனது உடல்" என்று நாம் சொல்வதாலும், ஐம்புலன் ஒடுங்கியநிலையில் (கனவுநிலை) தன்னை வேறாக அறிவதாலும், ஆழுறக்கத்தில் உண்தல் செயற்பாடுகளற்ற நிலையிலும் உயிர்ப்போடு இருத்தலாலும், விழிப்பு நிலையில் இன்னொரு குருவின் துணையால் உணர்த்த உணர்வதாலும் இந்த மாயையின் வசப்பட்டிருக்கும் இயந்திரமாகிய உடம்புக்குள் ஆன்மா உள்ளது. இங்கும் மெய்கண்டதேவர், ஆன்மாவின் இருப்பை நிறுவமுற்படும் போது தன்மையல்லாத முன்னிலைத்தன்மைகளை எடுத்துக்காட்டுவதன் மூலம் அவற்றினின்றும் வேறாகிய ஒரு ஆற்றல் உள்ளதென்றும் அதுவே ஆன்மாவென்றும் வலியுறுத்துகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூத்திரம் - 4

அந்தக் கரணம் அவற்றினொன் றன்றவை
சந்தித்த தான்மாச் சகசமலத் துணரா
அமைச்சு அரசு ஏய்ப்பநின் றஞ்சவத் தைத்தே

அந்தக்கரணம் - மனம், புத்தி, சித்தம், ஆங்காரம் ஆகியவை
சகசமலம் - ஆணவமலம் ; ஏய்ப்ப - போல்; அஞ்சவத்தை - விழிப்பு, கனவு, உறக்கம், துரியம் மற்றும் துரியாதீதம் என்கின்ற அஞ்சு அவத்தைகள்

இதற்கு முதலுள்ள சூத்திரத்தின்மூலம் ஆன்மாவெனும் பொருளானது, உடம்பு மற்றும் இந்திரியம் என்பவற்றுக்கு வேறாக உள்ளது எனநிறுவியபின்னர் அதே ஆன்மப்பொருளானது அந்தக் கரணங்களாகிய மனம், புத்தி, சித்தம், ஆங்காரம் என்பவற்றுக்கும் வேறாகி இருப்பதை இச்சூத்திரம் விளக்குகின்றது. இதற்கு உவமானமாக, ஒரு அரசன் தன் மந்திரிகளினுதவியோடு அரச கருமங்களை ஆற்றுதல் போன்று ஆன்மாவும் இந்திரியத்துணைகள் கொண்டு அறிகின்றவற்றை தன்வெவ்வேறு அவத்தைகளினூடு நுகர்வதை எடுத்துக்காட்டியுள்ளார். ஆயினும், சகசமலமாகிய ஆணவம் என்கிற இருட்போர்வையினால் ஆன்மா தன்னிலையை உணரத்தடைப்பட்டு நிற்கின்றது, என்பதாகும்.

சூத்திரம் - 5

விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்கு
அளந்தறிந் தறியா ஆங்கவை போலத்
தாந்தம் உணர்வின் தமியருள்
காந்தங் கண்ட பசாசத் தவையே

விளம்பிய - சொல்லிய; தமி - தனிமை ; பசாசம் - இரும்பு

மேற்சொன்ன மெய், வாய், கண், மூக்கு, மற்றும் செவி (தொக்கிநிற்கின்றது) என்பவை புறக்காரியங்களை (பஞ்சபூதத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மாத்திரைகளை) அளக்கும் அறிவை பெற்றிருப்பினும், அவை தாமாக (சுயமாக) எதையும் உணரமாட்டா. அவைபோன்றே. இவ்வுலகில் பிறக்கும் பசுக்களாகிய யாமும் பதியாகிய (சிவம்) தனித்த இறையருளின் உதவியன்றி எந்தவொன்றையும் நாமாகவே அறியமுடியாது. காந்தத்தின் முன்வைத்த இரும்பு போல இவ்வாறான பதியருள் பெற்றவை தத்தம் கருமங்களை நியதிகளுக்கேற்றாற்போல் செயற்படுத்துகின்றன, என்பதாகும்.

**சூத்திரம் - 6**

உணருரு அசத்தெனின் உணரா தின்மையின்
இருதிற னல்லது சிவசத் தாமென
இரண்டு வகையின் இசைக்குமன் னுலகே

அசத்து - நிலையற்ற; இருதிறன் - உணரும் உணராத் தன்மைகள்

மாந்தராகிய எம்மால் உணரப்பெறுவகையில் உருப்பெற்று நிற்றலால் அசத்து (உலகு) எனவும் அதேசமயம் எம்மால் உணரப்படமுடியாத தன்மையினால் இல்பொருள் (சூனியம்) எனவும் கூறப்படுவதனாலும் இவ்விரு தன்மைகளும் உள்ளதாகிய அல்லது சிவமாகியும் சத்தாகியும் (நிலையாகவும்) உள்ளபொரு ளென மெய்யுணர்வு பெற்றவர்களால் அறியப்படுகின்றது.

## சாதன-சாத்திய விவேகவியல்

**சூத்திரம் - 7**

யாவையுஞ் சூனியஞ் சத்தெதிர் ஆகலின்
சத்தே அறியா(து) அசத்தில தறியா(து)
இருதிறன் அறிவுள(து) இரண்டலா ஆன்மா

சூனியம் - எதுவுமற்றது ; சத்து - நிலையான பொருள் (ஆக்கம், அழிவற்றது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபஞ்சத்தில் உள்ள சகலவும் (உண்டென்கிற உலகமும், இல்லை என்கின்ற சூனியமாகிய மாயையும்) சத்தாகிய (நிலையா யுள்ள) இறைநிலைக்கு எதிர்த்தன்மையின. இவற்றில் சத்தாகிய இறைநிலை அசத்தாயுள்ள உலகம், மாயை என்பவற்றையும் மறுதலையாக அசத்துக்களாகியவை சத்தாயுள்ள இறைநிலை யையும் நோக்கியறியமாட்டா. ஆதலால், இவையிரண்டையும் நோக்கியறியும் திறனுள்ள, இவையிரண்டுமல்லாத மூன்றாவதாகிய ஆன்மா உண்டு.

**சூத்திரம் - 8**

ஐம்புலவேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே

அயர்ந்தனை - மயங்கினை; அன்னியம் - வேறாயிருத்தல்; அரன்கழல் - சிவன்பாதம்

ஐந்து புலன்களின் வழிச்சென்று இதுகாலும் மயங்கிக் கிடந்தனை என்று குருவின்மூலம் உணர்த்தப்பட்டு,,பின் சிவத்தவத் தால் கிடைத்த மெய்ஞ்ஞானத்தால் இந்த ஆன்மா பதியாகிய சிவத்தினின்றும் வேறாகியில்லாத சிவன்பாதம் அடைந்திவிடும்.

**சூத்திரம் - 9**

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
தண்நிழலாம் பதி, விதி எண்ணும்அஞ் செழுத்தே

ஊனக்கண் - உடம்பாலாகிய கண்; உராத்துனை தேர் - பேய்த்தேர் (கானல்நீர்); ஒருவ - நீக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகியல் விடயங்களால் விளையும் பாசத்தை உணரக்கூடிய இந்த உடம்பிலுள்ள கண்ணினால் சிவனாகிய பதியை உணரமுடியாது. அவ்வாறுணரமுடியாத இறைநிலையை ஆன்மஅறிவின்மூலம் கிடைக்கக்கூடிய ஞானக்கண்ணினால் கண்ட ஒருவருக்கு இவ்வுலகின் நிலையற்ற பந்தபாசங்கள் பேய்த்தேர் (கானல்நீர்) போன்றது. அவ்வாறான பாசத்தை நீக்குவதற்கு சிவபஞ்சாட்சரத்தை இடையறாது எண்ணுவோர்க்கு பதிஎன்கிற சிவனே குளிர்மைதரும் நிழலாயிருந்து இரட்சிப்பான்.

**சூத்திரம்** - 10

அவனே தானே யாகிய அந்நெறி
ஏகனாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை இன்றே

ஏகன் - தனியன் ; வல்வினை - கொடுவினை

அவனே தானேயாகி நிற்றல் என்பது - தத்துவமசி என்கிற அத்துவிதக்கோட்பாடின் அடிப்படையாகும். இவ்வாறு இறைவணி னின்று தன்னை வேறாக அறியாத அந்நிலையில் மலங்களாகிய ஆணவம், கன்மம், மாயை என்கிறமூன்றுமே இலாதொழியும்.

**சூத்திரம்** - 11

காணுங் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காணஉள் ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே

நம்கண்களால் காண்பவற்றை அறிவுக்கு காட்டும் ஆன்மாவைப்போல் இந்த ஆன்மாவுக்கு அந்த மெய்யானதை காட்டி நிற்பதால் அந்த சிவனின்பேரில் வைத்த சோர்வுறாத அன்பின்மூலம் அவன் பாதங்களை சேர்ந்து முக்திபெறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சூத்திரம் - 12**

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே

செம்மலர் - செந்தாமரைமலர்; நோன்தாள் - பெருமைக்குரிய தாள்; கழீஇ - நீங்குதல்; மரீஇ - பொருந்தி; நேயம் - அன்பு மலிந்த - பெருகிய

செந்தாமரைகள் போன்ற பெருமைக்குரிய தாளினை உடைய சிவனைச் சேரவிடாது வைத்திருப்பனவாகிய மலங்கள் (ஆணவம், கன்மம், மாயை) நீங்ககுதல் பொருட்டு, சிவனன்பர் களோடு சேர்ந்து (பொருத்தி) நின்று, மலங்கள் அற்று அன்பு பெருகிய சிவவேடம் பூண்டவர்களும், கோயில்களுமே சிவன் என்று தொழுது நிற்கும்.

**– சிவஞானபோத பாக்கள் முற்றும் –**

மனிதர்களால் படைக்கப்பட்ட விக்கிரகங்களுக்கு நாங்கள் கொடுக்கின்ற மதிப்பினையும் மரியாதையினையும் தவறென்று யாரும் கூறிவிட முடியாது. அது தான் வழிபாட்டின் முதற்கட்டமும் படிமுறையுமாகும். ஆனால் கடவுளால் படைக்கப்பட்ட மனிதர்களிடம் நாங்கள் அவற்றைக் காட்டுவதில்லை. அதுதான் நெஞ்சை உறுத்துகின்றது. நாங்கள் என்று கடவுளால் படைக்கப்பட்ட மனிதர்களிடம் அவற்றைக் காட்டுகின்றோமோ அன்றுதான் மனிதர்களால் படைக்கப்பட்ட விக்கிரகங்களில் பிரதிட்சை யாவதற்கு இறைவன் சித்தமாவான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திரம் எனும் தமிழ்மறை

**"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"**

**- திருமூலர்**

என்று பாடிய திருமூலர் இறைவனை "தமிழில்" செய்யவில்லை, "தமிழ் செய்யுமாறே" என்று தமிழும் இறையும் வேறல்ல என்று சூசகமாக அறிவித்துள்ளார். அத்தகைய தமிழில் வந்த மறையை தமிழர்களாகிய ஒவ்வொருவரும் அந்தந்த வயதுக்கேற்ற படிமுறைகளில் நன்றாக விளங்கிக்கற்றிருத்தல் தமிழ் அன்னைக்கும் இந்த மறையை தந்த திருமூலருக்கும் நாம் செய்யக்கூடிய அரிய நன்றிக்கடன்.

தமிழில் "மறை" என்பதற்கு "மறைந்து-இருத்தல்" என்கிற இருசெயல்கள் பொதிந்துள்ளவாறு கருத்தை கொள்ளவேண்டும். அதாவது, இருக்கும் ஒன்று மறைந்துள்ளது என்பதை பூடகமாக சொல்லுதல் என்று கொள்ளலாம். திருமந்திரம் என்கிற தமிழ்மறையை உலகுக்கு தந்தவர் திருமூலர் என்கிற சித்தர். அவர் ஆண்டுக்கு ஒரு பாடல்மூலம் மூவாயிரம் பாடல்களை எழுதி யிருப்பதாக வழிவழிவந்த செய்திகள் மூலம் அறிகிறோம். ஒருவர் இதில் உள்ள நம்பகத்தன்மையை கொச்சைப்படுத்தாமல் கேள்வியெழுப்ப முடியும். மூவாயிரம் வருடங்கள் ஒருவர் வாழ முடியுமா என்றால், அந்த மூவாயிரம் வருடங்கள் பூமியை சார்பாக வைத்து செய்யப்பட்ட ஒரு நேரக்கணக்கு. நவீன விஞ்ஞானம் ஆராய்ச்சிமூலமாக கண்டறிந்தவற்றை மட்டுமே நம்பும் ஒருவருக்கு, விண்ணுக்கு சென்று ஆய்வுசெய்து திரும்பும் விஞ்ஞானிகளுக்கு எப்படி நேரப்பயண (time-travel) கணக்குப்படி நாட்கள் குறைந்து காட்டுமோ அதுபோல, பூமியை தாண்டி வேறொரு இடத்தில் வாழும் அறிவைப்பெற்ற சித்தர்களுக்கு மூவாயிரம் ஆண்டுகள் வாழ்வதில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த சிக்கல்களும் இருக்கமுடியாது என்பதே இதற்கு பதிலாக அமையும். அதுமட்டுமல்ல திருமந்திரம் என்பது ஒரு சித்தரின் அநுபவநூல். அவர் பல இடங்களில் பயன்படுத்திய வார்த்தைகளே அவற்றின் ஆதாரங்கள். எடுத்துக்காட்டுக்கு கீழ்வரும் பகுதியை சொல்லமுடியும்.

**இருந்தேன் இக்காயத்தே எண்ணிலி கோடி**
**இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே**
**இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே**
**இருந்தேன் என் நந்தி இணையடிக் கீழே**

**- திருமூலர்**

என்கிறவாறு, தான் அநுபவத்தில் உணர்ந்தவற்றை பாடல்வரிகளினூடாக தெளிவுசெய்திருக்கிறார். எனவே மூவாயிரம் ஆண்டுகள் என்கிற பேச்சுக்கு இடமில்லை. இவ்வாறாக வாழ்ந்த சித்தராகிய திருமூலரின் இயற்பெயர் இதுவரை அறியப்படவில்லை. இமயமலையிலிருந்து திரும்பும் வழியில் இறந்து கிடந்த இடையர்மகனாகிய மூலன் என்பவனின் உடலில் புகுந்து அவனைச்சார்ந்த ஆனினங்களை வீடு சேர்க்கும் பணியில், அவரது சொந்த உடலை வேறுசிலர் எரியூட்டியதன் காரணமாக தனது புதிய உடலாகிய மூலனின் பெயரால் உருவாகியதே திருமந்திரம் என்னும் அரியநூல். இங்கும் சிலர் கேள்வியெழுப்ப முடியும். ஒருவர் இன்னொரு உடலில் எவ்வாறு இன்னொருவருடைய உயிர் போகமுடியும் என்று. நம்மில் பலருக்கு இன்றைய விஞ்ஞானத்தின் படி செயல்முறை விளக்கம் செய்து காட்டினால்தான் நம்புவார்கள். அதில் தவறில்லை. ஆனால் கண்ணால் கண்டால்தான் எல்லா வற்றையும் நம்பமுடியும் என்றால், அது எல்லோருக்கும் முடியாது. எடுத்துக்காட்டுக்கு, உப்பு உள்ளது. நீரில் கரையமுன் அது கண்ணால் காணக்கூடியது. கையால் தொட்டு உணரக் கூடியது. அதுவே நீரில் கரைந்தபின்னால், காண்பதும் முடியாது தொட்டுணரவும் முடியாது. அதனால், முன்னால் இருந்த உப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது இல்லை என்றாகிவிடாது. அதுபோன்றதுதான் இதுவும். சித்தர்கள் செய்தவற்றில் பல எம்மைப்போன்ற சாதாரணமானவர் களுக்கு விளங்கிக்கொள்ளும் அளவுக்கு நம் பக்குவநிலையை நாம் எட்டவில்லை என்பதுதான் சரியான விளக்கமாக அமையும். இவ்வாறாக உருவாகிய திருமந்திரத்தில் ஒன்பது "தந்திரங்கள்" உள்ளன. இங்கு தந்திரம் என்பது உபாயம் அல்லது வழி (method / approach) என்பதாகும். ஒன்பது தந்திரங்களும் சிவாகமங்கள் இருபத்தெட்டின் (28) சாரமாக அமைந்துள்ளது. அத்தோடு, இவ்வாறு ஒன்பது தந்திரங்களாக முறையாகப்பகுக்கப்பட்ட தொகுப்புக்கள் மனிதனாகப்பிறந்த ஒருவன் எவ்வாறு சைவநெறி யில் நின்று ஒழுகி வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக வாழ்ந்து இறைநிலையோடு சங்கமிக்கச் செய்யலாம் என்பதை படிநிலை விளக்கங்களாக தந்திருக்கின்றன.

**வந்த மடம் ஏழும் மன்னும் சன்மார்க்கத்தின்**
**முந்தி உதிக்கின்ற மூலன் மடவரை**
**தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம்**
**சுந்தர ஆகமச்சொல் மொழிந்தானே**

**- திருமூலர்**

என்று தன்வாயால் இந்தப்பாடல்கள் அமைக்கப்பட்ட விதத்தை சொல்லியிருக்கின்றார்.

திருமந்திரச்சிறப்புகள் சொல்லிலடங்கா. தமிழர்களின் சமயம் திருமந்திரத்தின் உட்கருத்துகளை விளங்கியவர்களுக்கே தெளிவாகத்தெரியும். தமிழர் வழிபாடு, வாழ்க்கைமுறை, தமிழர் அறம், அன்பு, தமிழர் கல்வி, தமிழர் பொதுவுடைமை, ஆட்சி முறை, உலகவியல் என்று புறச்சூழலில் தொடங்கி மெதுவாக தனிமனிதன் ஒருவனின் அகத்தினுள் பிரவேசிக்கும் இந்தப்பாடல்கள் அகமே இன்பம் என்பதையும் "உள்ளிருந்து நோக்கும்" வழிமுறையையும் மிகவும் அவதானமாகவும் தெளிவாகவும் விளங்கக்கூடிய தமிழ்நடையில் தந்திருக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்**
**மூலன் உரைசெய்த முன்னூறு மந்திரம்**
**மூலன் உரைசெய்த முப்பது உபதேசம்**
**மூலன் உரைசெய்த மூன்றும் ஒன்றாமே.**

**- திருமூலர்**

இங்கு நாம் தெரிந்திருக்கவேண்டியது, அவர் செய்த மூவாயிரம் தமிழ்ப்பாடல்களில் முன்னூறு பாடல்களை நாம் மந்திரமாகக் கொள்ளவேண்டும். ஆனால் அவை எவை என்று அவர் சொல்லவில்லை. நாமாக அறிந்து தெளியவேண்டும். அதுபோல், அவற்றில் முப்பது உபதேசங்களாகக் கொள்ளவேண்டும். இறுதியில், “மூலன் உரைசெய்த மூன்றும் ஒன்றாமே” என்பதன் மூலம் திருமூலர் மேற்கூறிய மூவாயிரம் தமிழும், முன்னூறு மந்திரங்களும், முப்பது உபதேசங்களும் ஆகிய மூன்றுமே ஒன்றையே குறிப்பன என்பதை சுட்டியுள்ளார். அந்த ஒன்று யாதென்பதை பின்வரும் பாடலின்மூலம் சொல்லியிருப்பார்.

**அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே**

**- திருமூலர்**

அதாவது அன்பே யாவற்றுக்கும் அடிப்படையாக இருப்பது. அன்பன்றி வேறொன்றும் இவ்வுலகில் நிலைத்து நிற்காது. அறிவுக்கு அடிநாதமாக விளங்குவது அன்பு ஒன்றே என்பதை மிகவும் தெளிந்து தன் ஈற்றடியில் அந்தப்பாடலை நிறைவுசெய்திருப்பார். இங்கு அன்பு என்பதை ஆங்கிலத்தில் LOVE என்கிற வார்த்தை யோடு பொருத்தி பேசுவது அறியாமையே. தமிழின் அன்பு என்கிற வார்த்தை மிகவும் அருள்நிறைந்தது. இதனையே உலகப் பொதுமறையாம் திருக்குறள் பின்வருமாறு உரைத்திருக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு**
**என்புதோல் போர்த்த வுடம்பு**

**- திருவள்ளுவர்**

முதலாம் தந்திரம் பல உபதேசக்கருத்துகளையும், யாக்கை, செல்வம், இளமை, உயிர் போன்றவற்றின் நிலையாத் தன்மைகளையும், தீயவழிகளாகிய கொல்லாமை, பிறன்மனை நயவாமை, புலால் மறுப்பு, கள்ளுண்ணாமை, கல்லாமை, மகளிரிழிவு போன்றவற்றையும், அந்தணர் ஒழுக்கம், வான்சிறப்பு, தானம், அறவழிநிற்றல், கல்வி, அன்புடைமை, நடுவுநிலைமை போன்றவற்றை தாங்கி நிற்கும்.

உபதேசக்கருத்துகளில் ஒன்றாக கீழ்வரும் பாடலை சொல்லமுடியும்.

**பண்டம்பெய் கூரை பழகி விழுந்தக்கால்**
**உண்டஅப் பெண்டிரும் மக்களும் பின்செலார்**
**கொண்ட விரதமும் ஞானமும் அல்லது**
**மண்டி அவருடன் வழிநட வாதே**

**- திருமூலர்**

அதாவது பண்டங்களால் நிரப்பப்பட்ட இவ்வுடலானது பழுதுற்று வீழும்போது மனைவி, மக்கள் அதைத்தொடர்ந்து செலார். மாறாக ஒருவர் கொண்ட ஒழுக்கமும் அதுசார்ந்த ஞானத்தின் விளைந்த பாவ-புண்ணியங்களே கூடச்செலும் என்பதாகும்.

இதுபோன்று யாக்கை நிலையாமையை கீழுள்ள பாடல்மூலம் தெளிவாக கூறியுள்ளார்.

**மண்ஒன்று கண்டீர் இருவகைப்பாத்திரம்**
**திண்ணென்று இருந்தது தீவினை சேர்ந்தது**
**விண்ணின்று நீர்விழின் மீண்டும்மண் ஆனாற்போல்**
**எண்இன்றி மாந்தர் இருக்கின்ற வாறே**

**- திருமூலர்**

ஒரே மண்ணினாலான இருவகைப்பாத்திரங்களில் சூளையிலிடப்பட்டது திடமாயிருந்தது. இன்னொன்று தீவினை சூழ்ந்து,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடப்படாத (பச்சைமண்) பாத்திரம் போன்று மழைநீரில் கரைந்து மீண்டும் மண்ணாகிவிடும். இவ்வகையாக நல்வினைகளால் கட்டமைக்கவல்ல தேகம் திடமாக இருக்கும் என்பதையும், அதற்கு இறையருள் தேவையென்பதையும் வலியுறுத்தியிருப்பார்.

இங்கு கவனிக்கவேண்டியது என்னவெனில், திருமூலர் என்றுமே இந்த தேகத்தை ஒரு பாவக்கலசமாக கொண்டதில்லை. மாறாக, ஒரு ஆன்மா தனது சுயரூபத்தை உணர்ந்து ஆனந்தமயமாக திளைத்திருக்கும் ஒரு ஆலயமாகவே போற்றினார் என்பதை பலபாடல்கள் மூலமாக உணர்த்தியிருப்பார். எடுத்துக்காட்டுக்கு கீழ்வரும் பாடலை சொல்லலாம்.

**உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்**
**உடம்புக்குள்ளே உறு பொருள் கண்டேன்**
**உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானென்று**
**உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே**

- திருமூலர்

அதாவது, இவ்வுடலானது வெறும் பொய்யானது என்று அதில் முனைப்புக்காட்டாமல் இருந்து, பின்னர் அவ்வுடம்பே இறைநிலை குடியிருக்கும் கோயில் என்றுணர்ந்து அந்த நிலையை தெளிந் துணரும் பொருட்டு உடம்பினை போற்றுகின்றேன் என்றவாறு சொல்லியிருக்கிறார்.

ஒரு சித்தரானவர், தன்னுடம்பின் அமைப்புநிலையை எவ்வாறு அறிந்து வைத்திருந்தார் என்பதை பின்வரும் பாடல் உணர்த்தும்.

**காலும் இரண்டும் முகட்டலகு ஒன்றுள**
**பாலுள் பருங்கழி முப்பத் திரண்டுள**
**மேலுள கூரைபிரியும் பிரிந்தால்முன்**
**போலுயிர் மீளப் புக அறியாதே**

- திருமூலர்

இங்கு, முதுகுத்தண்டு ஒன்றும் அந்த முதுகுத்தண்டோடு சேர்ந்த பருங்கழிகள் முப்பத்திரண்டும், மேலுள்ள கூரையாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கபாலமும் அது பிரிந்தால் வெளியேறும் உயிர் பற்றியும் சொல்லப் பட்டுள்ளது. இங்கு முள்ளந்தண்டில், கழுத்துப்பகுதியில் தொடர்பு பட்ட ஏழும் (C1 – C7 வரையான Cervical பகுதியையும்), நடுமுதுகுப் பகுதியில் தொடர்புபட்ட பன்னிரண்டும் (T1 – T12 வரையான Thoracic பகுதியையும்), கீழ்முதுகுப்பகுதியில் தொடர்புபட்ட ஐந்தும் (L1 – L5 வரையான Lumbar பகுதியையும்), குதப்பகுதியில் தொடர்புபட்ட ஐந்தும் (S1 – S5 வரையான Saccrum பகுதியையும்), ஈற்றில் மூலப் பகுதியான Coccyx பகுதியை ஒன்றாகவும் சேர்த்து முப்பத்திரண்டு பருங்கழிகளாக சொல்லப்பட்டுள்ளமை ஒரு சித்தருக்கிருந்த உடற்கூற்றறிவு (human anatomy) பற்றி சொல்லுகிறது.

செல்வம் நிலையாமை பற்றி பின்வரும் பாடல் விளக்கி நிற்கிறது.

**மகிழ்கின்ற செல்வமும் மாடும் உடனே**

**கவிழ்கின்ற நீர்மிசைச் செல்லும் கலம்போல்**

**அவிழ்கின்ற ஆக்கைக்கோர் வீடு பேறாகச்**

**சிமிழொன்று வைத்தமை தேர்ந்தறியாரே**

**- திருமூலர்**

அதாவது, நாம் மகிழ்ந்திருக்கும் செல்வச்சிறப்புகள் யாவும் நீரின்மேற்செல்லும் படகுபோன்றவை. எந்நேரமும் நீரின் மிகுதியால் கவிழலாம். இதனால், அழியவிருக்கும் இந்த உடம்புக்கு தலை என்னும் சிமிழையும் அதனுள் வீடுபேறு அடையும் அறிவையும் இறைவன் தந்துள்ளான். அந்த அறிவின் துணை கொண்டு இறைநிலையை அறியாதவராக, மாந்தராகிய வீணாக உழன்று திரிகின்றோமே என்பதாக இப்பாடல் அமைகிறது.

இளமைநிலையாமை பற்றிய அருமையான பாடல் கூட விளங்கிக்கொள்ளக்கூடிய நடையில் பின்வருமாறு அமைந்திருக் கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே**
**விழக்கண்டும் தேறார் விழிஇலா மாந்தர்**
**குழக்கன்று மூத்து எருதாய்ச் சிலநாளில்**
**விழக்கண்டும் தேறார் வியன்உல கோரே**

**- திருமூலர்**

கிழக்குத்திசையில் எழுந்து பின்னர் மேற்கே மறையும் சூரியனைப்போன்றது எமது இளமையும். சிறுகுழந்தை மூப்பெய்தி பின்னர் வயதுற்று இறக்கும் சுழற்சி உலகுக்கே பொதுவானது. இதை உணராது, மாந்தராகிய நாம் உலகியலில் உழன்று, நம் புறவழகை கெடாது என்று நம்பி பலவாறு அழகுபடுத்தி மகிழ்கிறோம் என்கிறவாறு அமைகிறது இப்பாடல்.

உயிர்களைக்கொல்லாமை பற்றிக்கூறுகையில்,

**பற்றாய நற்குரு பூசைக்கும் பன்மலர்**
**மற்றொரு அணுக்களைக் கொல்லாமை ஒண்மலர்**
**நற்றார் நடுக்கற்ற தீபமும் சித்தமும்**
**உற்றாரும் ஆவி அமர்ந்திடம் உச்சியே**

**- திருமூலர்**

என்றவாறு, இறைவனின் பூசைக்கு உகந்த உயரிய மலர் மற்றவொரு அணுக்களையும் கொல்லாமையாகிய மலராம் என்றும், அவ்விறைவனை அடைவதற்கு இந்தமலரின் துணை கொண்டு நற்றார் (நல்+தார் தார் - மாலை) எனப்படும் நடுக்க மில்லாத (அசைவற்ற) ஒளிபொருந்திய மனமாகிய மாலையை அணிந்த (உற்ற+ஆரும்) யாரும் செய்யவல்ல உச்சிமேல் பொருத்திய தவமே வழியாம் என்றும் உணர்த்துகிறார்.

இனி, அந்தணர் என்போர் எவ்வாறு ஒழுகவேண்டும் என்கிற விதியை பின்வருமாறு மொழிகின்றார்.

**அந்தணர் ஆவோர் அறுதொழில் பூண்டுளோர்**
**செந்தழல் ஓம்பி முப்போதும் நியமஞ்செய்**
**தம்தவ நற்கரு மத்துநின் றாங்கிட்டுச்**
**சந்தியும் ஓதிச் சடங்கறுப் போர்களே**

**- திருமூலர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தணர்களின் ஆறு தொழில்களாவன, வேதம் ஓதுதல், ஓதுவித்தல், யாகம் செய்தல், செய்வித்தல், தானம் பெறுதல், மேலதிகமாயுள்ளதை ஈதல் என்னும் ஆறுமாம். அதுமட்டுமன்றி அவர்கள் நியமகருமங்களை முப்போதும் ஆற்றி, தத்தமது தவத் தினை கருமந்தவறாது ஆற்றி சந்தியாகாலங்களில் ஓதுவனவற்றை ஓதி இன்னின்னவற்றுக்கு இன்னின்ன சடங்கு என்று வரையறுத்து அதுவழியே ஒழுகி நிற்பவரகளாம். இதுவழி நின்றோரே அந்தணர் என்றழைக்கத்தகுதி பெற்றோர் என்பதையும் வலியுறுத்துகின்றார்.

தானம் எனும் நற்காரியத்தையும் உணவை எவ்வாறு உண்ணவேண்டும் என்பதையும், கூட்டாக உண்பதன் சிறப்பையும் கீழ்வருமாறு எடுத்தியம்புகின்றது திருமந்திரம்.

**ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்**
**பார்த்திருந்துண்மின் பழம்பொருள் போற்றன்மின்**
**வேட்கைய யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்**
**காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே**

**- திருமூலர்**

யாவருக்கும் கொடுங்கள், அவர்களை வேண்டியவர், வேண்டாதவரென பார்க்காதீர்கள், தேவையானவர்களுக்கு கொடுத்து அவர்புசித்தபின் பார்த்திருந்து உண்ணுங்கள், பழையவற்றை (உணவு) போற்றிப்பாதுகாக்காதீர்கள், அவா நிறைந்தோரே - வேகமாக உணவைப்புசிக்காதீர்கள், காகங்களைப் போல கூடியிருந்து உண்ணப்பழகுங்கள் என்றவாறு சொல்லப் பட்டிருக்கின்றது.

கல்வியின் நோக்கம் அறியாது இன்றைய கல்விமுறை அமைந்துள்ளது. இதனையே, திருமூலர் தன் அநுபவத்தினூடாக தான்கற்ற கல்வி எத்துணையது என்பதை இயம்புகின்றார்.

**குறிப்பறிந் தேன்உடல் உயிரது கூடிச்**
**செறிப்பறிந் தேன்மிகு தேவர் பிரானை**
**மறிப்பறி யாதுவந் துள்ளம் புகுந்தான்**
**கறிப்பறி யாமிகும் கல்விகற் றேனே**

**- திருமூலர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலானது உயிரோடு கலந்து நிற்றலின் நோக்கம் அறிந்தேன். தேவர்பிரானாகிய சிவன் என்னுள்ளத்துள் எனை யறியாமல் புகுந்த அவ்வண்ணத்தினால் விளைந்த சுவையற்ற மிகுந்த கல்வியை கற்றேன் - என்று தன் அநுபூதி நிலையை விவரிக்கின்றார்.

இனி, இரண்டாம் தந்திரத்தின் பொதிந்தவற்றை எடுத்து நோக்கில், இரண்டாம் தந்திரம் முழுவதுமே இறைநிலையின் தன் மாத்திரைகளையும் கடமைகளையும் (characters and duties) குறித்து எழுதப்பட்டுள்ளது. இறைவனின் செயல்கள், மூவகை ஆன்மாக்கள், கருவுருக்கொள்தல், திருக்கோயில் தரிசனம், சிவசிந்தனை முதலாய கருத்துக்களை இயம்புகின்றது.

இறைவனின் கருமங்களாகிய ஆக்குதல், அழித்தல், காத்தல், மறைத்தல் அருளல் பற்றி சில பாடல்களில் குறிப்பிடப் பட்டுள்ளது. அவற்றில் ஒன்று வருமாறு.

**ஓராய மே உல கேழும் படைப்பதும்**

**ஓராய மே உல கேழும் அளிப்பதும்**

**ஓராய மே உல கேழும் துடைப்பதும்**

**ஓராய மே உட லோடுயிர்தானே**

**- திருமூலர்**

உடலோடு சேர்ந்த உயிராகின் அந்த ஒன்றே உலகின் முத்தொழில்களாகிய ஆக்கல், காத்தல், அழித்தல் தொழில்களை முன்னின்று நடத்துகின்றன என்று விளக்கி நிற்கிறது இப்பாடல்.

சித்தாந்தங்களில் கூறப்படும் மூவகை ஆன்மாக்களைப் பற்றி திருமந்திரம் பின்வருமாறு வகுக்கின்றது.

**விஞ்ஞானர் நால்வரு மெய்ப்பிரள யாகலத்(து)**

**அஞ்ஞானர் மூவருந் தாங்கு சகலத்தின்**

**அஞ்ஞானர் மூவரும் ஆகும் பதின்மராம்**

**விஞ்ஞான ராதிகள் வேற்றுமை தானே**

**- திருமூலர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்படி திருமந்திரம், இவ்வுலகில் மனிதர்களில் விஞ்ஞானர் எனும் ஆணவமலம் மட்டும் உள்ள வகுப்பினைச் சேர்ந்த நால்வரும், பிரளாயாகலர் என்கிற ஆணவம், கன்மமாகிய இருமலத்தைக்கொண்டோர் மூவரும், சகலர் என்கின்ற மும்மலமும் பொருந்தியவர்கள் மூவருமாக பதின்மர் இருப்பதாக விவரிக்கின்றது.

ஒரு கருவானது எவ்வாறு உருவாகின்றது என்பது தொடர்பிலும் திருமந்திரமானது பாடலொன்றின் மூலம் பின்வருமாறு விளக்கியுள்ளது.

**ஆக்குகின் றான்முன் பிரிந்த இருபத்தஞ்சு**

**ஆக்குகின் றான்அவன் ஆதிஎம் ஆருயிர்**

**ஆக்குகின் றான்கர்ப்பக் கோளகை உள்ளிருந்(து)**

**ஆக்குகின் றான்அவன் ஆவ(து) அறிந்தே**

**- திருமூலர்**

இறைவனானவன், முன்பு பிரிந்த தத்துவங்களில் இருபத்தைந்தை (ஐம்பொறி, ஐம்புலன், ஐம்பூதம், ஞானேந்திரியம் ஐந்து, அந்தக்கரணங்கள் நான்கு மற்றும் ஆன்மா) தாயின் கர்ப்பக்கோளினுள்ளே ஒவ்வொரு உயிருக்கும் என்னென்ன தேவை என்றறிந்து ஆக்குகின்றான் - என்றவாறு சொல்கிறது.

மூன்றாம் தந்திரத்தில் அட்டமாயோகம் என்னும் யோகக்கலையின் முழுவடிவமைப்பினையும் போதிக்கின்றது திருமந்திரம். அட்டமாயோகங்களான இயமம், நியமம், ஆதனம் (ஆசனம்), பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்கின்ற எட்டையும் அதைத்தாண்டி அட்டமாசித்திகள் பற்றியும், உடல் அழியாது காக்கும் உபாயம், சிவசிந்தனையில் திளைத்திருத்தல், பரியங்கயோகம், அமுரிதாரணை என்கின்ற சிறுநீர் உட்கொள்தல் மூலமான வீர்யத்தன்மை போன்றவற்றையும் போதிக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இயம நியமமே எண்ணிலா ஆதனம்**
**நயமுறு பிராணாயாமம் பிரத்தி யாகாரம்**
**சயமிகு தாரணை தியானம் சமாதி**
**அயமுறும் அட்டாங்கம் ஆவது மாமே**

**- திருமூலர்**

என்கிற பாடல் அட்டாங்க யோகத்தின் எட்டு நிலைகளையும் எடுத்தியம்புகின்றது.

இங்கு இயமம் எனும் தீயவற்றை ஒழித்து, நியமம் எனும் நற்கருமங்களாற்றி, அதன்பின் ஆதனம் அல்லது ஆசனம் என்கின்ற யோகப்பயிற்சிநெறி நின்றார்க்கு காற்றை வசப்படுத்தும் மூச்சுப் பயிற்சி தானாகக்கைக்கொள்ளும். மூச்சுப்பயிற்சியை எவ்வாறு படிப் படியாக முறையாகப்பயிலவேண்டுமென்கிற பாடல்கள் கீழ்வரு மாறு அமைகின்றன.

**ஆரியன் நல்லன் குதிரை இரண்டுள**
**வீசிப் பிடிக்கும் விரகு அறி வாரில்லை**
**கூரிய நாதன் குருவின் அருள் பெற்றால்**
**வாரிப் பிடிக்க வசப்படும் தானே**

**- திருமூலர்**

ஆரியன் - வெளியே இருக்கும் வாயு குதிரை இரண்டு - இடகலை, பிங்கலை என்னும் மூச்சுக்களுக்கு வழிசெய்யும் இடது,வலது நாசித்துவாரங்கள் விரகு - உபாயம் அதாவது வாயுவை மூக்குத்துவாரங்களினூடாக சரியான முறையில் இழுத்து விட்டு இடகலை, பிங்கலை ஆகிய நாடிகளை கட்டுக்குள் கொண்டுவரும் உபாயத்தை யாரும் அறிவதில்லை. சரியான குருவின் துணை கொண்டு இவ்வபாயத்தை அறியவல்லாருக்கு தொடர்ச்சியான அப்பியாசத்தின்மூலம் வாயுவை (மூச்சை) வசப்படுத்தும் அறிவு தெரியவரும். மூச்சை வசப்படுத்துவோருக்கு மனமாகிய குரங்கை சலனமற்று வைத்திருக்கும் வித்தை தானாகவே கைகூடுமாம்.

இவ்வாறு வாயுவின் மூலம் உற்ற இத்தேகத்தின் ஆரோக்கியத்தை பலவாறாக வருணிக்கும் திருமந்திரம் தனஞ்சயன் என்கிற வாயுவை சிறப்பான உயிர்வாயுவாக சொல்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் தனஞ்சயன் ஒன்பது காலில்
இருக்கும் இருநூற்று இருபத்து நான்காய்
இருக்கும் உடலில் இருந்தில ஆகில்
இருக்கும் உடல் அது வீங்கி வெடித்ததே

வீங்கும் கழலை சிரங்கொடு குட்டமும்
வீங்கும் வியாதிகள் சோகை பலவதாய்
வீங்கிய வாதமும் கூனும்முடம் அதுஆம்
வீங்கு வியாதிகள் கண்ணின் மருவியே

கண்ணில் வியாதி உரோகம் தனஞ்சயன்
கண்ணில் இவ்வாணிகள் காசம் அவனல்லன்
கண்ணினில் கூர்மன் கலந்திலன் ஆதலால்
கண்ணினில் சோதி கலந்ததும் இல்லையே

- திருமூலர்

சுருங்கச்சொல்லின், தனஞ்சயன் என்கிற வாயுவே உலகில் பரவிவாழும் உயிர்கள் யாவற்றுக்கும் பொதுவான வாயு என்றும் அதுஇல்லையேல் இவ்வுடம்பு வீங்கி வெடிக்குமியல்பினதாகும் என்றும் (பழுதடையும்), இவ்வாயு மருவி (மாறுபட்டு) இயங்கு மானால் உடலில் பிணிகள் பல தோற்றும் என்றும் கூறுகின்றது. அது ஒருபுறமிருக்க, மூச்சின் படிநிலைகளை பின்வருமாறு திருமந்திரம் இயம்பும்.

ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்
ஆறுதல் கும்பகம் அறுபத்து நாலதில்
ஊறுதல் முப்பத் திரண்டதில் இரேசகம்
மாறுதல் ஒன்றின்கண் வஞ்சகம் ஆமே

- திருமூலர்

மூச்சின் படிநிலைகள் மூன்றுள. உள்ளெடுக்கும் வாயு ஏறுதல் என்றும், உள்ளே தடுத்து வைத்திருக்கும் வாயு கும்பகம் என்றும், வெளிவிடும் வாயு இரேசகம் என்றும் சுட்டப்படும். வாமம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது இடகலை. இதில் சரியான பயிற்சிசெய்த ஒருவர், இடதுபக்கமாக ஈரெட்டு (பதினாறு) மாத்திரைகள் வாயுவை சரியாக உள்ளெடுத்து, அதை உள்ளே பிடித்து அறுபத்துநாலு மாத்திரையளவுகள் வைத்திருந்து (கும்பகம்) பின்னர் மூச்சை மாற்றி வலது பக்கமாக முப்பத்திரண்டு மாத்திரையளவில் வெளியேற்ற வேண்டும். அதாவது 1:8:4 என்கிற விகித அடிப்படையில் இது அமையும். இதை சரியான பயிற்சியின் மூலமே ஒருவர் எட்டுதல் வேண்டும். இவ்வாறு செய்துவரும் ஒருவருக்கு முதுமையை வெற்றிகொள்ளும் உபாயமும் கைகூடுமென்கிற செய்தியை பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கின்றது.

**வளியினை வாங்கி வயத்தில் அடக்கில்**
**பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்**
**தெளியக் குருவின் திருவருள் பெற்றால்**
**வளியினும் வேட்டு அளியனும் ஆமே**

**- திருமூலர்**

வளியாகிய காற்றை உள்ளிழுத்து சரியாக அதை உள் நிறுத்தும் உபாயம் அறிவார்க்கு முதுமையுற்றாலும் உடல் பிஞ்சாகிய தோற்றத்தில் இருக்குமாம். இதனை தெளிந்த குருவின் மூலம் கேட்டறிந்து பயிற்சி செய்வார்க்கு தேகமானது வளியை விட மென்மையாக (அளி) இருக்குமாம். அதுபோல, தேகமானது நீடித்த நாட்கள் உயிர்வாழும் தன்மையினதாக மாறும் என்பதை பின்வரும் பாடல் உணர்த்தி நிற்கின்றது.

**ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்**
**காற்றைப் பிடிக்கும் கணக்கு அறி வாரில்லை**
**காற்றைப் பிடிக்கும் கணக்கு அறிவார்க்கு**
**கூற்றை உதைக்கும் குறிஅது வாமே**

**- திருமூலர்**

அதாவது, மேற்கூறிய பாடல்கள் மூலமாக வாயுவை உள்ளே ஏற்றி, அதனை உள்நிறுத்தி, பின்னர் இறக்கி விடும் சரியான அளவுகளை அறிந்தவரில்லை. இதனை சரியாக செய்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருபவர்களுக்கு கூற்றாகிய மரணத்தை பிற்போடக்கூடிய உபாயம் கைகூடுமாம். அவ்வாறான, கணக்குகளின் ஒன்று கீழ்வருமாறு.

**வாமத்தால் ஈரெட்டு மாத்திரை பூரித்தே**
**ஏமுற்ற முப்பத் திரண்டும் இரேசித்துக்**
**காமுற்ற பிங்கலைக் கண்ணாக இவ்விரண்டு**
**ஓமத்தால் எட்டெட்டுக் கும்பிக்க உண்மையே**

**- திருமூலர்**

வாமம் - என்கிற இடப்பக்கத்தால் பதினாறு மாத்திரைகள் பூரகமாக வாயுவை உள்ளெடுத்து, பிங்கலை என்கிற வலப்பக்கத் தால் முப்பத்திரண்டு மாத்திரைகள் இரேசகமாக வாயுவை வெளியேற்றி, அக்கினிக்குண்டம் என்கிற வயிற்றுப்பகுதியாகிய வேள்விப்பகுதியில் (ஓமம் - ஓமகுண்டம்) எட்டெட்டு (அறுபத்து நான்கு) மாத்திரைகள் வாயுவை உள்நிறுத்தி வைத்திருப்போர்க்கு (கும்பகம்) உண்மைப்பயன் கைகூடும் என்பதாகும். இவ்வாறாக, பலநாட்கள் சாதகம் செய்யும் ஒருவருக்கு அடுத்தடுத்த படிமுறை களாகிய பிரத்தியாகாரம் என்கிற மனதை ஒருவழிப்படுத்தும் வழியும், தாரணை என்கிற மனம் ஒன்றித்து நிற்கும் உபாயங்களும் கைகூடும்.

இவ்வாறு நிட்டைகைகூடவல்ல ஒருவர்க்கு சமாதி என்கின்ற துரியாதீத ஆற்றல் கைகூடும். இந்நிலையில் ஒருவருக்கு,

**மேலை நிலத்தினாள் வேதகப் பெண்பிள்ளை**
**மூல நிலத்தில் எழுகின்ற மூர்த்தியை**
**ஏல எழுப்பி இவளுடன் சந்திக்கப்**
**பாலனும் ஆவான் பார்நந்தி ஆணையே**

**- திருமூலர்**

எனுமாறு இளமைகைகூடி உடம்பு அழியாவண்ணம் நீட்டிக்க உதவும் உபாயம் கூறப்பட்டுள்ளது. அஃதாவது, மேலை நிலம் எனும் தலைப்பகுதியில் உள்ள சித்சக்தியை (அறிவு அல்லது நாதம்) மூலநிலம் எனும் மூலாதாரத்தில் உறங்கிக்கிடக்கும் குண்டலினி என்கிற சக்தியை (இத்தொழிலை செய்யும் இச்சா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியை) சரியான தாரணைப்பயிற்சியின் மூலம் (கிரியாசக்தி) மேலெழுப்பி இவ்விருசக்திகளையும் சேர்க்கவல்லார் மூப்பெய்து வதை குறைத்து பாலனும் ஆகவிருக்கும் சக்தி பெறுவராம். இது ஈற்றில் சமாதி என்கிற நிலைக்கு இட்டுச்செல்லும்.

**சமாதி இயமாதியில் தான்சொல்லக் கேட்கில்**
**சமாதி இயமாதியில் தானெட்டுச் சித்தி**
**சமாதி இயமாதியில் தங்கினோர்க்கு அன்றே**
**சமாதி இயமாதி தலைப்படும் தானே**

**- திருமூலர்**

யோகநிலையாகிய சமாதிநிலையில், உடம்பு மற்றும் அதனோடு கூடிவரும் உணர்வு, நினைவுகள் அற்று யாவும் அடங்கி யிருக்கும். இவ்வாறு சமாதி கூடவல்ல ஒருவருக்கும் தொடர்சியான தவத்தின் பயனாக அட்டமாசித்திகளும் கைகூடிவருமாம். அட்டமாசித்திகள் என்கிற எட்டு வகையான சித்திகளைப்பற்றி திருமந்திரம் பின்வருமாறு கூறும்.

**தானே அணுவும் சகத்தும்தன் நோன்மையும்**
**மானாக் ககனமும் பரகாயத் தேகமும்**
**தானாவ தும்பர காயம்சேர் தன்மையும்**
**ஆனாத உண்மையும் வியாபியும் ஆம்எட்டே**

**- திருமூலர்**

அட்டமாசித்திகள் என்பது, அணிமா - எனும் நினைத்த மாத்திரத்தில் உடலை அணு போல் சுருக்கும் வல்லமை, மகிமா - எனும் உலகைப்போல பெரிய தேகம் எடுக்கும் வல்லமையும், கரிமா - எனும் திண்மை கூடிய தேகம் எடுக்கும் வல்லமை, இலகிமா - எனும் பரவெளியைவிட இலேசான தேகம் எடுக்கும் வல்லமையும், பிராப்தி - எனும் தூரத்தே இருக்கும்பொருளை கிட்டத்தில் அடையப்பெறவல்ல திறனும், பிரகாமியம் - எனும் பரகாயம் (பிறர் உடம்புக்குள் செல்லுதல்) செல்லும் பயிற்சியும், ஈசத்துவம் - எனும் தேவையானவற்றை படைக்குமாற்றலையும், வசித்துவம் - எனும் உலகில் யாவற்றையும் வசப்படுத்தும் ஆற்றலையும் ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு அட்டமாசித்திகளும் பெற்ற ஒருவருக்கு மரணபயமில்லை. காலக்கணக்கு இல்லை.

**மூலநாடி முகட்டலகு உச்சியுள்**
**நாலுவாசல் நடுவுள் இருப்பீர்காள்**
**மேலைவாசல் வெளியுறக் கண்டபின்**
**காலன் வார்த்தை கனாவிலும் இல்லையே**

**- திருமூலர்**

மூலநாடி என்கின்ற சுழுமுனையினூடு வாயுவை செலுத்த வல்லோர்க்கு முகட்டலகு எனும் தலைப்பகுதியில் உள்ள நாலுவாசல் (கண், மூக்கு, செவி, வாய்) நடுவில் அமைந்துள்ள புருவமத்தியினுள் ஓரங்குலம் உள்ளாக அமைந்திட்ட நடு வீட்டுக்குள் இருகும் உபாயம் கைகூடும். அதன்மூலம் மேலை வாசலை (சகஸ்ராரம் எனும் கபாலவுச்சியில் தெரியும் ஆயிரம் இதழ் தாமரை) வெளியுறக்காண்பீர்கள் (இதைதே துரியாதீத தவம் என்கின்ற சிதாகாச வெளி என்பர்). இவ்வநுபவத்தை பெறும் ஒருவருக்கு காலன் என்கிறவார்த்தைக்கும் இடமிருக்காதாம்.

இந்நிலையில்தான் ஒருவருக்கு ஆனந்தக்கூத்தாம் ஆடலரசன் சிவனின் உணர்நிலை தோற்றும்.

**ஒடுங்கி ஒருங்கி உணர்ந்து அங்கு இருக்கில்**
**மடங்கி மடங்கிடும் வாயு அதனுள்**
**மடங்கி மடங்கிடும் மன்னுயிர் உள்ளே**
**நடங்கொண்ட கூத்தனை நாடுகின் றேனே**

**- திருமூலர்**

அதாவது, மனமொடுங்கி ஒருமுகப்பட்டு சிவத்தை உணர்ந் திருக்கும்வேளையில் வாயுவும் மடங்கிடுமாம். வாயுவின் ஓட்டம் குறைந்தால் உடலுக்கு பசியிருக்காது. உணர்விருக்காது. உடல் பூரித்து ஒளிர்ந்திருக்கும். உயிர் சலனமற்று அடங்கிநிற்கும். இந்நிலையில் சித்தம் என்கிற சிதாகாசத்தின் நடுவே சிவனின் ஆனந்தத்தாண்டவம் தெரியுமாம். இந்நிலையை வேறு எந்தசித்தர் களும் இவ்வாறு அநுபவம் மூலம் வெளிப்படுத்தியிலர். ஆனால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமந்திரம் அதனை சிறப்புற சொல்லியிருக்கிறது. இவ்வாறு சித்தத்தில் சிவனை உணர்ந்தவர்களுக்கு அதன் பின்னான படிமுறைகளும் கைகூடும். அதனை மீதி ஆறு தந்திரங்களிலும் அநுபவபூர்வமாக தந்த ஒரு அரியநூலே திருமந்திரமாம். இதனை தமிழில் தந்த திருமூலர் பிரானை மனதில் நிறுத்தி யாமும் அவர்பெற்ற அந்த இன்பநிலையை தமிழில் கற்றுணரத்தலைப் படுவோம். அதற்கான பக்குவநிலையையாவது தமிழ் தெரிந்த அனைவரும் பெறவேண்டும் என்பதே இதன் நோக்கமாகும். அப்பக்குவநிலையை அடையவல்ல ஒருவருக்கு இவ்வுலகின் உலகியல் இட்டங்கள் யாவும் உண்மையல்ல என்பது பூரணமாய் விளங்கும். நாம் இவ்வுலகில் பிறந்திட்டது ஒரு கருமமாற்றும் நோக்கமே என்றும், அந்நோக்கத்தில் எதிர்பார்ப்புகளுக்கு இடமில்லை என்றும் விளங்கும். எதிர்பார்ப்புகளற்ற வாழ்கையில் திருப்தி தானாக ஏற்படும். திருப்தியுற்ற வாழ்க்கையில் ஆனந்தம் நிலைபெற்று நிற்கும். அங்கு இறைவன் தானாகவே குருவடிவம் தாங்கி ஒவ்வொருவரையும் முக்திபேறு பெறச்செய்வான். உண்மையை உணர்ந்தபின்பும் உலகியல் கடமைகளை ஏற்று வாழ்வோர் “சீவன்முத்தர்களாகி” தத்தம் கடமையாற்றி சிவபதம் பெறுவார்கள்.

**மரத்தை மறைத்தது மாமத யானை**
**மரத்தின் மறைந்தது மாமத யானை**
**பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்**
**பரத்தின் மறைந்தது பார்முதல் பூதமே**

அன்பே சிவம் !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வேதாத்திரி மகரிஷி அவர்களின் நற் சிந்தனையில் இருந்து சில துளிகள்

# நிலையும் அலையும்

இறைவெளியாகிய பிரம்ம நிலை, அதன் இயல்பான தன்மைகள் பூரணம், அறிவு விரைவு என்பன வெளிக்காட்டாத இருப்பு நிலையாகும். "பிரம்மம்" எனும் புனிதப் பொருளை, அகத்தால் நோக்கும் போது அது பூரணமானது, முற்றறிவாக உள்ளது. அனைத்தியக்கங்களுக்கும் மூலம் ஆன "அழுத்தம்" எனும் வினைவடக்கமானது என்ற கொள்ள வேண்டும். பிரம்மம் வேறு, பூரணம் வேறு அறிவு வேறு, விரைவு மூலமான அழுத்தம் வேறாக கருதவே முடியாது.

பிரம்மமே பூரணமாகவும், அறிவாகவும், ஆற்றலாகவும் உள்ளது என்று தான் கொள்ளவேண்டும். பூரணமே, பிரம்ம மாகவும், அறிவாகவும், ஆற்றலாகவும் உள்ளது. அறிவே பிரம்ம மாகவும், பூரணமாகவும், ஆற்றலாகவும் இருக்கிறது. ஆற்றலே பூரணமாகவும், பிரம்மமாகவும், அறிவாகவும் இருக்கிறதென்று ஒவ்வொரு தத்துவத்திலும் நான் கையும் சேர்த்தே மதிக்க வேண்டும் அகப்பொருளான "அறிவு" தான் எல்லாப் பொருளிலும், இயக்கத் திலும் ஒழுங்காற்றலெனும் சீரமைப்பு திறனாக முகிழ்ந்துச் செயல் புரிகின்றது.

கருமையக் காந்தத் திணிவில் அடிப்படை ஆற்றலாக இருப்பது இறையாற்றல் இதில் அடக்கமாகவுள் அறிவு, காந்த நிலையில், புலன்கள் மூலம் இயங்கும் போது "மனம்" எனப்படுகின்றது. நிலையாக உள்ளது. "அறிவு" அலையாக உள்ளது. "மனம்" விளக்கும் வெளிச்சமும் போல, நீரும் அலையும் போல, நிலையாக அறிவும், அலையாக மனமும் உள்ளன.

-அருள் தந்தை-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளைக் காணலாம்

கடவுளைக் காண முடியும் என்றால் காணமுடியும் எந்தக் கண்ணால் பார்க்க வேண்டுமோ, எந்த நோக்கத்தோடு பார்க்க வேண்டுமோ அப்படிப்பார்த்தால் காணலாம் ஒரு செயல் செய்கிறோம். எந்தச் செயல் செய்தாலும் ஒரு விளைவு இருக்கின்றதல்லவா? கையை தட்டினேன் சப்தம் வந்தது. கையை தட்டினவரைக்கும் தான் என்னுடைய முயற்சி சப்தம் நான் செய்தேனா, ஒலியை நான் செய்தேனோ, நான் கொண்டு வந்தேனா? இல்லவே இல்லை, இருப்பின் இருந்து, என்னுடைய செயலினால் குவிந்தது, காது கேட்கின்ற அளவுக்குக் குவிந்தது, அவ்வளவு தன் சொல்லலாம்.

ஆகவே இறைவன் இல்லாத இடமே இல்லை. அதற்கு அடையாளம் என்ன? நீ எந்தச் செயலைச் செய்தாலும் அதற்கு விளைவாக வருபவனும் இறைவன் தான். அது தான் இறைவனுடைய செயலே. அனுபவத்தை வைத்துக் கொண்டு ஒரு செயலை நல்ல செயலா இருக்க வேண்டும் என்ற சிந்தனையோடு திட்டமிட்டுச் செய்வோமானால் நலமே வினையும் இல்லை புலனைவில் கவர்ச்சியாக மயக்கத்திலே எதோ வேகத்திலே செய்கின்றபோது இன்பமும் வரலாம், துன்பமும் வரலாம். இன்பம் வேண்டும், அமைதி வேண்டும் என்றால் அதற்கு இறையுணர்வு, அறநெறி இரண்டும் வேண்டும்.

**-அருள் தந்தை-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியப்பாவிற்கான பேரமகளின் ஒரு மடல்

உருவங்கள் ஒருநாள் அருவங்கள் ஆகும் என்பதை யான் அறிவேன்
எனினும்...
எதிர்பார்த்திராத ஒரு பொழுதினில் நீவிர் அருவமாவீர் என்பதை
யான் அறிந்திலேன்...
இருப்பினும் இதுவே இயற்கையின் நியதி
யான் வாழும் காலம் வரை நின் வழிகாட்டல்களும்
நின் நினைவுகளும் என்றும் என்னுடன் பயணிக்கும்.
அன்போடும், செல்லத்தோடும் தாங்கள் அளித்த அரவணைப்பு
என்றும் யான் மறந்திலேன்..
ஆங்கிலப் புலமை, புத்தகங்களின் மீதான காதல் யாவும்
நீவிர் அடியேனுக்கு வழங்கிய பொக்கிஷங்கள்...
எந்தன் திறமையும் எதிர்கால வெற்றிகளும் என்றும்
உம் புகழ் உரைக்கும்...

அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே ..

- தமி -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது அப்பப்பா அன்பானவர். எப்போதும் எங்களுடன் அப்பப்பா வீட்டில் நிற்பார். அடிக்கடி எங்கள் இருவரையும் கோயில் கூட்டிச் சென்று விளையாட வருவோம். மாடும் மயிலும் பார்க்கப் போவோம். எனக்கு தோடு குத்தும் போது நான் அழுதேன் நீங்கள் அழுதீர்களாம். எனக்கு ஏபிசிடி வயலினும் வாசிக்கச் சொல்லித்தந்தீர்கள். நான் பரிசுகள் கொண்டு வந்து உங்களுக்குத்தான் காட்டுவேன். எனது நிகழ்ச்சிகளுக்கு வர உங்களுக்கு நல்ல விருப்பம். நான் என்ன செய்தாலும் பெருமையுடனும் சிரிப்புடனும் பார்த்துக் கொண்டிருப்பீர்கள். ஒவ்வொரு நாளும் எங்களுக்கு நித்திரைக்குப் போகமுன் திருநீறு பூசி விடுவீர்கள். உங்கள் சைக்கிள், கண்ணாடி, தொப்பி வீட்டில் இருக்கின்றன. பூமரங்களில் பூக்கள் பிடுங்காமல் இருக்கின்றன. புத்தகங்கள் திறக்கப்படாது இருக்கின்றன. உங்கள் அறையில் ஒருவரும் இல்லை. TV யும் போடப்படவில்லை. வாசலில் வாசு யார் நிற்கிறார்? என்று யாரும் கேட்கவும் இல்லை. எங்கள் வீட்டில் ஐந்து பேர் இருந்தோம். இப்போது அப்பப்பா இல்லை. கொரோனா விடுமுறையில் வீட்டு முற்றத்தில் சந்தோஷமாக விளையாடினோம். இப்போது நாங்கள் யாருடன் விளையாடுவது? சிவமோடு சிவமாகப் போனீர்களோ?

பேர்த்தி சு.மாதுமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நினைவில் அப்பப்பா

காலை எழுந்து பூப்பிடுங்கி
கோயில் போவார் அப்பப்பா
பால் வாங்கி எங்களுக்கு
கொண்டுவருவார் அப்பப்பா
தலைசீவி சப்பாத்து போட்டு
வழி அனுப்பும் அப்பப்பா
பாடசாலை விட்ட நேரம்
வாசலிலே வந்து
தலைதடவி என்னை வீடு
கூட்டிச்செல்வார் அவரே
வீடுவந்து சோறு ஊட்டி
தூங்கவைப்பார் .. என்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்து, மட்டை விளையாட
எனக்குத் தோழன் அவர்தான்
இனிப்பு மிட்டாய் ஐஸ்கிறீமும்
தருபவரும்... அவர்தான்
வெயில் எம்மைப் பிடிக்காமல்
மழையிலுமே நனையாமல்
பாதுகாப்பாய் எம்மைப் பார்த்த
இனியவரும் அவர்தான்
கோயிலுக்கு மயில் பார்க்க
சூரன்போர், வாழை வெட்டு
ஆடுபார்க்க என்று நாளும்
கூட்டிச் செல்வார் என்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பு என்று என்னை அழைக்க
யாரும் இல்லை இன்று
அம்மா அடித்தால் என்னைப் பிடிக்க
நீங்கள் இல்லை இன்று

என்றும் உங்கள் நினைவுதான்
என் மனதில் சக்தி
சிவன் பாதம் சேர்ந்து நீங்கள்
அடையவேண்டும் முக்தி.

பேரன்
சு. மாதனன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

" ஏந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு "

எமது குடும்பத்தின் குலவிளக்காய் திகழ்ந்த

**அமரர் திரு. தம்பையா வேலாயுதபிள்ளை**


அவர்களது திடீர் மரணச் செய்தி கேட்டு எமது துக்கத்தில் பங்கு கொண்டு இறுதிக்கிரியை நிகழ்வுகளில் நேரடியாகவும் தொலைபேசி, மின்னஞ்சல் மூலமும் ஆறுதல் மொழி பகிர்ந்தோர்க்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் மற்றும் பதாகைகள் வெளியிட்டோர்க்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் எமது இல்லத்தில் நடைபெற்ற அந்தியேட்டி கிரியை மற்றும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிராத்தித்த அனைவருக்கும் எமது குடும்பத்தினர் சார்பாக இதயபூர்வமாக நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

அன்னாரின்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவழி




* அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவே எனது ஆனந்தம்,
இந்தவாறு, வழி ஓரம் காத்திருந்து,
ஒளியை உருநிழல் துரத்துவதையும்,
கோடையைத் தொடர்ந்து மழை வருவதையும்,
பார்த்திருத்தல்,
இதுவே எனது ஆனந்தம்

தகவலாளர்கள், அறியப்படாத வான்பரப்புக்களிலிருந்து,
செய்திகளோடு வந்து,
எனக்கு முகமன் கூறி,
வீதிவழி விரைகின்றனர்
உள்ளே எனது உள்ளம் மகிழ்கிறது
கடந்து செல்லும் தென்றலின் மூச்சு இனிக்கிறது

விடிகாலை முதல், மங்குபொழுதுவரை
இங்கு, நான், எனது வாயிலின் முன்
குந்தி இருக்கிறேன்...
நான் காண இருக்கும் அந்த ஆனந்தப் போது...
திடீரென வரும் என்பது
எனக்குத் தெரியும்

அதுவரை
நான் தனித்திருந்து புன்சிரிப்பேன்,
பாடுவேன்.......
அதுவரை.....
காற்றுவெளி, நம்பிக்கை நறுமணத்தால் நிரம்பும்.

கீதாஞ்சலி: 44

தீபம் பிறிண்டேர்ஸ், யாழ். 0772506234
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org